www.tamilarangam.net

மாவீரர் நாள் 2001 நவம்பர் 27

# களத்தில்

06.11.2001 246

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள்

தர்மமும் உண்மையும் எம் பக்கம் சார்ந்திருக்கின்றன; அதுவே எமது பலம். அதர்மமும் பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கின்றன. அதுவே அவனின் பலவீனம்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்



# இராணுவ அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் சந்திரிகா அரசு.

## கடலிலும் தரையிலுமாக விரியும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள்

## சமாதான முகமும் தோற்று, போர் முகமும் தோற்ற நிலையில், தேர்தலை எதிர்கொள்ளும் சந்திரிகா

*ஏழாண்டுகளுக்கு முன்னர், அனைத்துத்தரப்பினரிடமும் கவர்ச்சியான வரவேற்பைப் பெற்று, ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகாவின் சமாதான முகம் முற்றாகத் தோற்றுப் போய்விட்டது.*

*சமாதானத்திற்கான போர் என்ற போர்வையில், தமிழர்பகுதியை ஆக்கிரமித்து, தமிழினத்தை அடிமைப்படுத்த நினைத்த சந்திரிகாவின் போர்முகமும் தோற்றுப்போய்விட்டது. இப்போது அவர் முகமற்றவராகிவிட்டார்.*



சந்திரிகா அரசின் யுத்த நாட்டம், நாட்டைக் குட்டிச்சுவராக்கி, அதனை அதளபாதாளத்தில் தள்ளிவிட்டிருக்கின்றது. சமாதானத்தை எட்ட வழிகள் இருந்தபோதும், அதனை அடைத்துவிட்டு, இராணுவ ரீதியாக வெற்றியைச் சம்பாதிப்பதன் மூலம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலம்வாய்ந்த நிலையொன்றை எட்டமுடியும் என்ற சந்திரிகா அரசின் கணக்கு தப்பானதென நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

சிங்களத்தின் பொருளாதாரம் மிக மோசமான கட்டத்தை அடைந்துவிட்டது என்பது சொல்லித் தெரியவேண்டிய விடயமல்ல. போரைத் தென்னிலங்கைவரை விரிவுபடுத்திய பெருமையைப் பெற்றவர் சந்திரிகா என்ற வகையில், தென்னிலங்கையில் தொடரும் தாக்குதல்களால் ஏற்பட்டுவரும் மோசமான பொருளாதாரப் பின்னடைவுகளுக்கும் அவரே காரணமாகின்றார். வெளிநாட்டு உல்லாசப் பயணத்துறையும், வெளிநாட்டு மூலதன வரவுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கப்பல் விமானப் போக்குவரத்துத்துறை சரிந்துபோய்க்கிடக்கின்றது. ஏற்றுமதி இறக்குமதித்துறை நொந்துபோய்க்கிடக்கின்றது.

யுத்தத்தின் பின்விளைவுகளாய், பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, சாதாரண வெகுசனம் நிமிரமுடியாத நிலையில் பெருமூச்செறிகின்றது.

வடக்கு கிழக்கில் சிங்களம் போடுகின்ற குண்டுகளின் பேரோசையும், தமிழ் மக்களின் அவலக்கூக்குரல்களும் கேட்கமுடியாத ஒரு பூமியில், போரின் வலிதெரியாமல் தீவின் பிறிதொரு இனம் வாழ்ந்த பகுதியில் இன்று குண்டுகள் வெடிப்பதும், கட்டிடங்கள் சரிவதுமான அவலத்தின் விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதுதான் சிங்களத்தின் இன்றைய யதார்த்தம்.

இந்தச் சிக்கலுக்குள் நின்றபடி, தேர்தலை எதிர்கொள்கின்றது சிங்களம். சந்திரிகா அரசு, எதிர்க்கட்சிகள் வகுத்துள்ள தேர்தல் வியூகத்தில் சிக்கித் தடுமாறுவதாகவே தோன்றுகின்றது.

இந்தப் பிரச்சினைகளில் இருந்து இலகுவாக வெளியேற சிங்களம் வழமையாகக் கடைப்பிடிக்கும், தமிழர் பகுதிமீதான போர் என்ற உக்தி, எதிர்விளைவான பலனைத் தந்துவிடக்கூடிய ஆபத்தும் இருப்பதை, சந்திரிகா தற்போது நன்கு உணர்வார் என்றே நம்பலாம். எனினும், கடந்த மாதம் 23ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில், பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை சந்திரிகா அரசபடையினர் மேற்கொண்டிருந்தனர். என்றாலும், மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என்ற பெயரில், அந் நடவடிக்கை பின்னர் கைவிடப்பட்டிருந்தது.

தமிழர் பிரதேசத்தை, போர்க்களமாக்கி, அரசியல் களத்தில் வெற்றியீட்டும் சிங்களத்தின் கனவுகள் ஒருபுறம் இருக்க, தரையிலும் கடலிலுமாக விடுதலைப் புலிகளின் விரிவுபட்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகளை எதிர்கொள்ள முடியாது சிங்களப்படையினர் திணறுவது, பயமுறுத்தும் உண்மையாக சிங்களத்தை வாட்டுகின்றது.

கடந்த இரு மாதங்களில் ஆறுக்கும் மேற்பட்ட கடற்சமர்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருக்கின்றனர். சிங்களத்தின் பல டோராக்கள், அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் உள்ளன. சிங்களக் கடற்படையினர் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். கடந்த 30ம் திகதி, பருத்தித்துறைக் கடற்பரப்பில், சிங்களக் கடற்படையினரின் பலத்த பாதுகாப்புடன் சென்ற சிங்களப்படையினரின் பாரிய எண்ணைத் தாங்கிக் கப்பல் மீது கடற்புலிகள் தாக்குதல் நடத்தி, அதனை அழித்திருக்கின்றனர். தமிழீழக் கடற்பரப்பில் அதிகரித்துவரும் கடற்புலிகளின் தாக்குதல்கள், சிங்களத்தின் ஆக்கிரமிப்புக்கான உயிர்வழங்கல் பாதை ஆபத்திற்குள்ளாகியுள்ளது என்ற காத்திரமான செய்தியை சிங்களத்திற்கு வலுவாக உணர்த்துவனவாக உள்ளன.

அதேவேளை, தென்தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள், அதிகரிக்கப்பட்டுவருவதால், சிங்களப்படை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள பகுதிகளில், அதன் அதிகாரப்பிடி, மெல்லத் தளர்ந்து வருகின்றது. திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம், பெரிதும் சிறிதுமான பதினைந்துக்கும் மேற்பட்ட தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

இம்மாதம் முதலாம் திகதி மூதூரில், 64ம் கட்டையில் நடத்தப்பட்ட தாக்குதலில், பதினொரு பொலிஸார் கொல்லப்பட்டு, இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்த சம்பவம், ஒரு தாக்கமான அடையாளமாகக் கருதப்படுகின்றது.

மணலாற்றுப் பகுதியிலும் கடந்தமாதம் மூன்றுக்கும் மேற்பட்ட தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தியிருக்கின்றனர். வவுனியாமாவட்டம் மற்றும் தமிழீழத்தின் ஏனைய இடங்களிலுமாக பன்னிரண்டுக்கும் மேற்பட்ட தாக்குதல்களை விடுதலைப் புலிகள் கடந்த மாதத்தில் மட்டும் நடத்தியிருக்கின்றனர்.

நீண்ட காலத்திற்குப் பின்னராக, யாழ் குடாநாட்டில், வடமராட்சி நெல்லியடிப்பகுதியில், கடந்த மாதம் 24ம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர்த் தாக்குதல், சிங்களத்திற்கு பெரும் கிலியை ஏற்படுத்திய தாக்குதலாக அமைந்திருக்கின்றது. சிங்களத்தின் உச்சபட்ச பாதுகாப்புக் கொண்ட பகுதியில் இராணுவ முகாமிற்கு அருகாமையில் வைத்து, இத்துணிகரத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. உயர் கட்டளையதிகாரியான லெப்டினன்ட் கேணல் விஜேயக்கோனும் மேலும் ஆறு இராணுவத்தினரும் அச்சம்பவத்தில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

சிங்களத்தின் இராணுவத் தாக்குதல் வியூகத்தை உடைத்து, தற்காப்பு வியூகம் அமைத்து தற்காக்கும் நிலைக்கு அதனைத் தள்ளும் விதமாய் விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் செயற்பாடுகளை, தமிழீழப்பகுதியெங்கும் விரிவுபடுத்தியுள்ளனர்.

தற்போது, அனைத்துவிதமான நெருக்குதல்களுக்கும் மத்தியில் சிக்குண்டிருக்கின்றது சந்திரிகா அரசு. வாக்குவேட்டைக்குக் கிளம்பும் சிறீலங்கா அரசு, சிங்கள மக்கள் மத்தியில் எதைச் சொல்லப்போகின்றது. சமாதான முயற்சியில் வெற்றி பெற்றாகிவிட்டதென்றா? அல்லது விடுதலைப் புலிகளை வெற்றிகொள்வது என்ற வீரசபதத்தை நிறைவேறிவிட்டதென்றா? அல்லது சிங்கள மக்களுக்கான வாழ்கையை மேம்படுத்தப்போவதாக, கடந்த காலத் தேர்தல் வாக்குறுதிகளை ஒப்பேற்றியாகிவிட்டதென்றா? தானே தோண்டிய குழிக்குள் விழுந்து, வெளிவரமுடியாமல் தவிக்கிறது சந்திரிகா அரசு.



இனிவரும்காலம் உங்களுக்கு

கவிஞர் புதுவை இரத்தினதுரை

07

04



திரிசங்கு சொர்க்கநிலையில் சந்திரிகா அரசு

எல்லாளன்



சிறுகதை

எதற்காக?

அஜந்தி


10

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பொறிக்குள் மாட்டுப்பட்ட சந்திரிகா.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் அண்மைய பிரித்தானிய விஜயம், விடுதலைப் புலிகளுக்கெதிரான சர்வதேச பரப்புரை நோக்கத்தைக் கொண்டிருந்தது. 'பயங்கரவாத'த்திற்கெதிராக கூட்டணி சேர்ந்துள்ள சர்வதேச நாடுகளின் அமைப்புடன் கை கோர்த்துக்கொள்ளும் அவரது ஆவலும், அவரது பயணத்திற்கான காரணமாக அமைந்தது.

பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராக, இருக்கின்ற சிறிய இடைவெளியைப் பயன்படுத்தி, சர்வதேச அரங்கில், பயங்கரவாதத்திற்கெதிரான தனது காட்டமான குரலை வெளிப்படுத்திவிட அவர் துடித்தார். இதன் மூலம், எதிர்கொள்ளவிருக்கும் பொதுத்தேர்தலிலும் வாக்குவேட்டைக்கு சாதகமான தளத்தை அமைத்துக்கொள்வதும் அவரது நோக்கமாக இருந்தது.

அமெரிக்கா மீதான செப்டம்பர் தாக்குதலின் விளைவுகள் குறித்த வாதப் பிரதிவாதங்களிலும், எதிர்ச்செயற்பாடுகள் பற்றிய விவாதங்களிலும், சர்வதேச் சமூகம் தனது புலன்களைச் செலுத்திக்கொண்டிருக்கும் தற்போதைய நிலையில், ஒரு பிரச்சாரத் தளத்தைப் பெற்றுக் கொள்வது சிறீலங்கா சனாதிபதிக்கு இலகுவான காரியமாக இருக்கவில்லை.

பிரித்தானியாவுக்கான அவரது மூன்று நாள் குறுகிய விஜயத்தில், அவரது நிகழ்ச்சித் திட்டங்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான பரப்புரையை நோக்கமாகக் கொண்டிருந்தன. பி.பி.சி, சி.என்.என், ஆகிய முக்கியமான சர்வதேச ஊடகங்கள் உட்பட, பல சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள், என்பனவற்றிற்கு செவ்விகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தற்போதைய உலகச் சூழ்நிலையில், சர்வதேச சமூகத்தின் கருத்தை, சிறீலங்கா விடயத்தில் கவர்ந்திழுந்து, விடுதலைப் புலிகள் மீதான சர்வதேச எதிர்ப்புணர்வை ஏற்படுத்த இதுவே சமயம் எனக் கருதிய சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சகம், சந்திரிகாவின் கருத்துக்கள், சர்வதேச ஊடகங்களில் வெளிவரவேண்டும் எனக்கருதியது. சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சகம், பிரித்தானியாவில் உள்ள தனது தூதரகத்திற்கூடாக பெருந்தொகைச் செலவில் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

'பயங்கரவாதம்' குறித்து உலக சமூகம் கொதிப்புணர்வில் இருக்கும் இவ்வேளையில், விடுதலைப் புலிகளையும் பயங்கரவாதக் கூண்டில் ஏற்ற, நல்ல சந்தர்ப்பம் இதுவென, சந்திரிகா அரசு நினைத்துச் செயற்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளையும் சர்வதேச பயங்கரவாத அமைப்பாக வகைப்படுத்தப்பட்ட அமைப்புக்களுக்கும் இடையே முடிச்சுப் போடவும், அமெரிக்கா மீதான தாக்குதலை விடுதலைப் புலிகள் வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தனர் எனவும், முகமற்றமுறையில், முகவரியின்றி செய்திகளை உருவாக்கிவிட்டுத் தோற்றுப்போன சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் மீது சேற்றைவாரியிறைக்க சாத்தியமான பிறவழிகளையும் ஆராய்ந்துவருகின்றது. இதன் ஒரு அங்கமே, அவரது பிரித்தானிய விஜயம்.

ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால், புலிகளுக்கெதிராக பிரச்சாரத்தை மேற்கொள்ளச் சென்று, தானாகவே பொறிக்குள் வந்து மாட்டிக் கொண்ட எலியாகிப் போனார் சந்திரிகா என்பதுதான்.

பயங்கரவாதம் குறித்த காட்டமான நீண்ட செவ்வியொன்றுக்கு தன்னைத் தயார்ப்படுத்தியிருந்த சந்திரிகாவால், அரசபயங்கரவாதம் குறித்து தொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியவில்லை.

பி.பி.சி.யின் Hard Talk நிகழ்சியின்போதும், சி.என்.என். கேள்விபதில் நிகழ்ச்சியின்போதும், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா பதில் சொல்லமுடியாது திணறியதும், திண்டாடியதும், மழுப்பி, பொய்சொல்லி தப்பிக்கவிளைந்ததும், இன்று செய்தி ஊடகங்களில் பிரதான விடயமாகியுள்ளன.

உலகின் பார்வையாளர் வட்டத்தைப் பெரிதாகக் கொண்ட இவ்விரு முக்கிய செய்தி ஊடகங்களிலும், சந்திரிகாவின் உண்மையான தோற்றம் அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதன்மூலம் சந்திரிகாவின் உண்மைத்தோற்றம் என்பதிலும், சிங்களப் பேரினவாத அரசுக்களின் உண்மைத் தோற்றம்' அம்பலத்திற்கு வந்ததாகவே கொள்ளப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் போராட்டச் செயற்பாடுகளை, பயங்கரவாதச் செயற்பாடுகளாக வகைப்படுத்த தகுந்த வாதங்களை தயாரித்துக்கொண்டு சென்றவருக்கு, தன்னைநோக்கி வந்த கேள்விக் கணைகளுக்கு பதில்சொல்ல முடியவில்லை.

செம்மணி, பண்டாரவளை, மிருசுவில் எனத் தொடரும், தமிழர்மீதான சிங்களத்தின் பயங்கரவாதச் செயல்கள், சர்வதேச சமூகத்தால், மனிதஉரிமை மீறல் பக்கங்களில் பதிவாகியுள்ளமை, பெரும் நெருக்கடியைத் தந்திருக்கின்றது.

அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களை 'நேற்று பெய்த மழைக்கு இன்று முளைக்கும் காளான்களுக்கு' ஒப்பிட்டார் சந்திரிகா.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆண்டறிக்கையில் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள் குறித்த தவல்களை தவறும், பொய்யும் என வாதிட்டார் சந்திரிகா.

தனது நாட்டின் உச்சநீதிமன்றத்தையே ஒரு கட்டத்தில், பிழையென சாதிக்கவும் அவர் முனைந்தார்.

அவர், தன்னை நோக்கிவந்த கேள்விக்கணைகளில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள துணைக்கழைத்ததெல்லாம், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியைத்தான்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில், தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், இனப்படுகொலைகளைப் போல், தனது ஆட்சிக்காலத்தில் இல்லை எனவும், முன்பு கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை போல் தற்போது இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி நடைமுறைப்படுத்திய, தமிழர் பகுதிமீதான பொருளாதாரத்தடையை, தனது ஆட்சியில் நீக்கியதாக, அப்பட்டமாக பொய்யுரைத்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில், படையிலும் பொலிசிலும் சேர்க்கப்பட்டவர்கள், கொலைகள், கொள்ளைகள், மற்றும் குற்றல்செயல்கள், தமிழர்மீதான தாக்குதல்களுக்காகவே பழக்கப்பட்டவர்கள் எனவும், தனது ஏழாண்டு ஆட்சிக்காலத்தில், பலநூற்றுக்கணக்கானோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறி, தனது உள்வீட்டு நிலையை வெளிப்படுத்தினார்.

மொத்தத்தில், தனது நோக்கங்களை இழந்து, தனது அரசின் அலங்கோலங்களும் பயங்கரவாத்முகமும் வெளிப்பட்ட நிலையில், நாடு திரும்பியிருக்கின்றார் சந்திரிகா.

புலிகள் பற்றி வெளுத்துவாங்குவார் சந்திரிகா என, இனிதான எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்த, சிங்களப் பேரினவாதிகளுக்கும், ஆளும்கட்சிப் பிரமுகர்களுக்கும் இது கசப்பான, அருவருக்கும் உண்மையாகிவிட்டது.

சிங்களப் பேரினவர்திகளுக்கு, இது சற்று ஆத்திரமூட்டவும் செய்கின்றது. தனது ஆட்சிக்கால தவறுகளை மறைக்கத் திராணியற்ற சந்திரிகா, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில்தான் தமிழர்மீது இனஅழிப்புகளும், இன ஒடுக்குமுறைச் செயற்பாடுகளும் தலைவிரித்தாடின எனக்கூறி, நாட்டைக் காட்டிக்கொடுத்து விட்டார் சந்திரிகா என்ற கோபம்.

குற்றவாளிகள், மோசமான நடத்தை கொண்டவர்கள், என படையினரைக் குற்றஞ்சாட்டி தனது அரசை தப்பவைத்துக்கொள்ள அவர் மேற்கொண்ட முனைப்பு, புலிகளுக்கெதிராக போரிட்டு மடியும் சிங்களப்படையினருக்கு சந்திரிகா செய்த துரோகமாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

போர்நிறுத்தம் செய்து, விடுதலைப் புலிகளுடன் பேச தயாராக இருப்பதாகவும், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து பேச்சுவார்த்தையின்போது ஆராயத் தயாராக இருப்பதாகவும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா தனது வெளிநாட்டு செவ்விகளில் தெரிவித்திருப்பது, சர்வதேச சமூகத்தின் கருத்துடன் தான் ஒத்துப் போவதாகக் காட்டிக்கொள்ளவே என்றபோதும், அது சிறீலங்காவின் தேர்தல் களத்தில், குழப்பமான நிலையை பொதுசன ஐக்கிய முன்னணிக்கு எற்படுத்தும் என்பது தெளிவானது.

உள்நாட்டில் ஒரு முகமும் வெளிநாட்டில் ஒரு முகமும் காட்டிவந்த சந்திரிகாவுக்கு இது ஒரு நெருக்கடியான காலம் என்பதில் சந்தேகமில்லை.

■■

**[illegible]:-**

கடந்த இதழின் முதற் பக்கத்தில் லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோர் விரச்சாவடைந்த திகதி தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் விரச்சாவடைந்த திகதி 26.10.1996 என்பதே சரியானதாகும். தவறுக்கு வருந்துகிறோம்.

# நுணுக்குக் காட்டி

'தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு களத்தில் நின்று போராடும் போராளிகளுக்கு, பாராளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் உறுதுணையாக இருப்பதற்கும், அதற்குத் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் அரசியல் சக்திகளின் ஆதரவைத் திரட்டுவதற்குமே உருவாக்கப்பட்டது'

'விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் திடீரென ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. இனப்பிரச்சினை தோன்றிய காலத்தில் இருந்து தந்தை செல்வநாயகம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள். அதனால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள், அனைத்தும் கிழித்தெறியப்பட்டதை அடுத்தே விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது என்பதை எவரும் மறுக்கமுடியாது'

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர்
இரா. சம்பந்தன்
28.10.2001 அன்று அவரது வாசஸ்தலத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில்.

'நாம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுச் சென்றாலும் எமது மக்களுக்கு ஒருபோதும் முழுமையான விடுதலையைப் பெற்றுக் கொடுக்கமுடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரமிகு, தீரமிகு போராட்டத்தால்தான் எமது மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தரமுடியும்'

ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர்
தி.மகேஸ்வரன்.
31.10.2001 உதயன்

'சர்வாதிகாரப் போக்கில் நாட்டை யாராலும் முன்னேற்ற முடியாது. பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதி செவிசாய்க்கவேண்டும். அதை விடுத்து தான்தோன்றித்தனமாக செயற்பட்டால் தான் இன்று ஜனாதிபதிக்கு இந்தக்கதி'

மல்வத்த பௌத்த பீடாதிபதி
ரம்புக்வெல ஸ்ரீ விபஸ்ஸி.
(14.10.2001 வீரகேசரி)

'தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள். அவர்களுடன் மட்டும் பேச்சு நடத்துவதன் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும். இதை உலகிற்கும், அரசுக்கும், பேரினவாதக் கட்சிகளுக்கும் பொதுத் தேர்தலின் மூலம் திட்டவட்டமாக எடுத்துக் காட்டவே நாம் கூட்டுச் சேர்ந்தோம்'

'பதவிக்கு வரும் அரசாங்கம் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்பதே எமது திடமான கொள்கை. தமிழினத்தின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் பின்னாலேயே தமிழினம் அணிதிரண்டு நிற்கிறது'

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர்
அ.விநாயகமூர்த்தி.
29.10.2001 உதயன்.

'தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளுடன் மட்டுந்தான் பேசவேண்டும் என்பது இன்று நேற்று நிலவிய கருத்தல்ல. 1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் இந்த மண்ணில் நிலைகொண்டிருந்த வேளையே இந்தக் கோட்பாடு தமிழர்களால் முன்வைக்கப்பட்டது'

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின்
யாழ். மாவட்ட வேட்பாளர்,
சீ.வி.கே. சிவஞானம்.
(28.10.2001 அன்று அவரது நல்லூர் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொய்மான் சந்திரிகா

**பி.பி.சி. சி.என்.என்** தொலைக்காட்சி பேட்டிகளில், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, தனது அரசின் மனித உரிமை மீறல்களை மறைக்க பெரிதும் முயன்றார் என்றாலும், சர்வதேச பார்வையாளர்கள் முன்னிலையில் அவர் தோற்றுப்போய்விட்டார். தமிழர் பகுதி மீது தனது அரசு பொருளாதாரத் தடையை விதிக்கவில்லை என கூசாமல் பொய் சொன்னார் சந்திரிகா. பொருளாதாரத் தடைகுறித்த சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின் அறிக்கையை, அப்பட்டமான பொய்என்று சாடினார்.

மனித உரிமை மீறல்கள் விவகாரத்தில் தனது அரசு முன்னையை அரசைவிட முன்னேற்றம் கண்டிருக்கின்றது என, தனது அரசுக்கு தானே சான்றிதழ் வழங்கினார். அமெரிக்காவின் கடந்த ஆண்டுக்கான மனித உரிமைகள் அறிக்கையில் சிறீலங்கா பற்றித் தெரிவித்திருக்கும் விடயங்கள், உண்மைக்கு மாறானவை என கடிந்துகொள்ளவும் செய்தார் சந்திரிகா. ஆட்சிக்கு வந்தகையுடன், ஐக்கிய தேசியக்கட்சி அமுல்ப்படுத்தியிருந்த பொருளாதாரத்தடையை தனது அரசு நீக்கியது என வாய்கூசாமல் பொய்கூறினார் சந்திரிகா.

உண்மையில், சந்திரிகா அரசே, தமிழர் பகுதிமீதான பொருளாதாரத்தடையை மேலும் இறுக்கி, தமிழ்மக்களை மோசமாகப் பாதிக்கும் விதத்தில் செயற்பட்டுவருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில், தமிழர்பகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை, பதினொரு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கின்றது. 1994ம் ஆண்டு சந்திரிகா அரசு ஆட்சிபீடம் ஏறிய பின்னர், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின்போது, பொருளாதாரத்தடை நீக்கம் குறித்து சந்திரிகா அரசு சில உறுதிமொழிகளை வழங்கியிருந்தபோதும், அது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. பொருளாதாரத்தடை முன்போலவே தொடர்ந்தது. சிங்களப்படையினர் வழமைபோல, பொருளாதாரத் தடையை அமுல்ப்படுத்தினர். பேச்சுவார்த்தை முறிந்து மீண்டும் போர் தொடர்ந்ததற்கு, அரசின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையே இருந்த முரண்பாடுகளும் ஒரு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னிப் பிரதேசத்தில், சிங்கள அரசின் பொருளாதாரத்தடையால், மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் ஏராளம். குழந்தைகள், போசாக்கின்மையால் வாடுவதும், கர்ப்பிணித் தாய்மார் போசாக்கின்மையால், கருச்சிதைவுக்கும், பிறக்கும் குழந்தைகள் நிறைகுறைந்து, வலுவிழந்து பிறப்பதற்கும், சிசுக்களின் மரணவீதம் அதிகரிப்பதற்கும் காரணம். இளம் குழந்தைகள், பாடசாலைகளுக்குச் செல்லும் பிள்ளைகள் போசாக்கின்மையால் பாதிப்படைவதால், குழைந்தைகளின் கல்வி மோசமாகப் பாதிப்படைந்துவருகின்றது.



மெலிந்தும் நலிந்தும்போன இளம்சந்ததியொன்று வன்னியில் உருவாகிவருவதற்கு சந்திரிகா அரசு முழுமையாகக் காரணமாகின்றது. இறப்பு வீதமும் வன்னியில் அதிகரித்துவருவதற்கு சந்திரிகா அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடையே முக்கிய காரணமாகின்றது.


சந்திரிகா அரசின் பொருளாதாரத் தடையும், போரின் திணிப்பும் வன்னி மண்ணில் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவருவதை சந்திரிகா எப்படி மறுத்துரைக்க முடியும். சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் அறிக்கைகளை, அப்பட்டமான பொய் என்று சாடுவதன் மூலம், உள்ளூரில் பொய்காரி என்று பேர் எடுத்த சந்திரிகா, சர்வதேச அரங்கிலும் தன்னை அடையாளம் காட்டவிளைந்திருக்கின்றார்.

# பொருத்தமான விசுவாசி டக்கிளஸ்

இதுவும், ஒரு மறுப்புப் பற்றிய செய்தி. சந்திரிகாவினது அல்ல. அவரது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும், ஈ.பி.டி.பி. டக்கிளஸ் தேவானந்தா பற்றிய செய்தி. டக்கிளஸ் தேவானந்தா, ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின்போது, அதற்கு உறுதுணையாகச் செயற்பட்டு, பின்னர் ஆட்சி மாற்றத்தின்போது பொதுசன ஐக்கிய முன்னணிக்குத் தாவியவர். சிங்களப் பேரினவாத அரசுகளுக்கு தனது வல்லமைக்கும் மீறி, விசுவாசமாகச் செயற்படுபவர். இனத்தை விற்றுப்பிழைக்கும் தற்குறி.

யாழ் குடாநாட்டில், மருந்துப் பொருட்கள், வைத்திய உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுவதை, சந்திரிகாவின் அமைச்சர் டக்கிளஸ் தேவானந்தா கடுமையாக மறுக்கின்றார். சந்திரிகா பாணியில், அப்படி யார் தெரிவித்தது? அது முற்றுமுழுதான பொய் என அவர் வாதிடவும் செய்கின்றார்.

21.10.2001 அன்று, பி.பி.சி. தமிழோசை செய்தியாளர் டக்கிளஸ் தேவானந்தாவைத் தொடர்புகொண்டு, குடாநாட்டில் நிலவும் வைத்தியப் பிரச்சினைகள் குறித்து கேட்டிருந்தார். பி.பி.சி.யின் கொழும்பு முகவர் பிரான்சிஸ் காரிசன் அவர்கள் அண்மையில், யாழ் சென்றபோது கண்டும் கேட்டும் அறிந்துகொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, யாழ் வைத்தியசாலையில் நிலவும், மருந்துத்தட்டுப்பாடு மற்றும் வைத்திய உபகரணங்களுக்கான தட்டுப்பாடு குறித்தும், வைத்தியர்கள் பற்றாக்குறை குறித்தும் வினவியபோதே, டக்கிளஸ் தேவானந்தா அதனை கடுமையாக மறுத்துரைத்தார். இது பொய்யான தகவல் என்றார் அமைச்சர் டக்கிளஸ் தேவானந்தா.



சந்திரிகாவிற்கு எவ்வளவு பொருத்தமான விசுவாசிதான் என்பதை அவர் மெய்ப்பிக்கின்றார். எதிர்வரும் தேர்தலில், வெற்றி பெற்று ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிபீடம் ஏறினால், மீண்டும் அவர் ஐக்கிய தேசியக்கட்சியில் ஒட்டிக்கொள்வார் என்பது வெளிப்படையானது. பாராளுமன்றக் கதிரை இல்லாவிட்டாலும், விசுவாசம் மிக்க ஆயுதக்குழுவாக, பேரினவாத அரசுக்கு சேவகம் செய்ய அவர் தயாராகவே இருப்பார்.

சரி... சர்வதேச செய்தியாளர்கள் யாழ் குடாநாட்டில் நிலவிவரும் பற்றாக்குறையை ஆதாரத்தோடு முன்வைக்க, டக்கிளஸ் தேவானந்தாவோ... அப்படியொன்றும் கிடையாது என்று மறுப்பது ஒருபுறம் இருக்கட்டும்.

யாழ் வைத்தியசாலை வட்டாரங்கள் இது குறித்து என்ன சொல்கின்றன?

யாழ் போதனா வைத்தியசாலையில் மருந்துவகைகளுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது என, யாழ் வைத்தியசாலை நிர்வாகம் யாழ் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கின்றது.


இதுதான் உண்மை நிலை. இதனை யாரும் மறைக்கமுடியாது. யாழ் போதனா வைத்தியசாலையின் மருந்து நிலைமை தொடர்பாக, அன்றாடம் வைத்தியசாலைக்கு வந்து செல்லும் ஆயிரக்கணக்கான நோயாளர்களும் மக்களும் அறிந்து வைத்துள்ளனர் என வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஈ.பி.டி.பி. கூலிக்குழுவைப்பற்றியும் டக்கிளஸ் தேவானந்தாவைப் பற்றியும் தமிழ் மக்கள் மாத்திரமன்றி, சர்வதேச ஊடகத்துறையினரும் அறிந்தும் தெரிந்தும் வைத்திருக்கின்றனர்.

# சிங்களத்தின் தேர்தலும் வன்முறையும்

சிறீலங்காவின் பன்னிரண்டாவது பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. கூடவே, தேர்தல் வன்முறை களும் ஆரம்பித்துவிட்டன. ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி அலுவலகம் மீது 14.10.2001 அன்று தாக்குதல் நடத்தி, தீமூட்டி, தேர்தல் வன்முறையை ஆரம்பித்து வைத்திருக்கி ன்றது சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி.

23.10.2001 அன்று ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்புத் தலைமையகம் மீதும் கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது. தேர்தல் வன்முறைகளும் மோசடிகளும், கட்டுக்கடங்காமல் எகிறிச் செல்லும் என்பதற்கான அறிகுறிகள் தற்போதே தென்பட ஆரம்பித்து விட்டன. வடமேற்கு நகரான மினுவாங்கொடவில் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர் ஒருவரை, முன்னாள் பிரதியமைச்சர் ரெஜி ரணதுங்கா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஆயுதபாணிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, 29.10.2001 அன்று இறந்து போயுள்ளார்.



இம்மாதம் முதலாம் திகதி, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளர் அப்துல் மசூக் மட்டக்களப்பு காத்தான்குடியில், கைக்குண்டு வீச்சுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்கானபோதும், மயிரிழையில் காயங்களுடன் உயிர்தப்பியுள்ளார். வேட்பாளர் ஒருவரைக் குறிவைத்து நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகக் கருதப்படுகின்றது. உயிர்தப்பிய அப்துல் மசூக்கும், அவரது கட்சியின் தலைவர் ராவூப் காக்கீமும், சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணிமீதே குற்றஞ்சாட்டுகின்றனர்.

சனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பு உத்தியோகத்தராக இருந்த, பாதாள உலகக்கும்பலோடு நெருங்கிய தொடர்புபட்டவரும், பல குற்றச்செயல்களோடு நேரடியாகவே சம்பந்தப்பட்டவருமாகக் கருதப்படும் சன்சீவா என்பவர், இம்மாதம் 2ம் திகதி, நுகெகொடவில் வைத்து கொல்லப்பட்டிருக்கின்றார்.

இப்படியாக... தீவைப்பில் ஆரம்பித்த தேர்தல் வன்முறை வெறியாட்டங்கள், துப்பாக்கிச் சூடுகள் கைக்குண்டு வீச்சுக்கள் வரை வளர்ச்சி கண்டிருக்கின்றது. தேர்தல் நெருங்க நெருங்க, தேர்தல் வன்முறைகளும் உச்சக்கட்டத்தை அடையும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த ஆண்டு நடைபெற்ற சிறீலங்காவின் பதினோராவது பாராளுமன்றத் தேர்தலின் போது, கொலை, கொலை பயமுறுத்தல், அடிதடி, வன்முறைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பொலிசில் பதியப்பட்டுள்ளன.

கடந்த பொதுத்தேர்தலில், கண்டியில் ரத்வத்தையின் நெறிப்படுத்தலில் அவரது மகன்கள் தலைமை தாங்கிய வன்முறைச் செயற்பாடுகள், தேர்தல் மோசடிகள் குறித்து பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தோரே வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்தனர். பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம். ஜெயரத்தினா, ரத்வத்தையும் அவரது மகன்களும் மேற்கொண்ட வன்முறைகள் மோசடிகள் குறித்து பகிரங்கமாகத் தெரிவித்ததுடன், இதுகுறித்து சந்திரிகா விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார். அந்தளவிற்கு மிக மோசமான சம்பவங்கள் கண்டியில் இடம்பெற்றன.

கடந்த பொதுத்தேர்தலின்போது கண்டி மாவட்டத்தில், நாற்பதினாயிரம் தமிழ் வாக்குகள் அபகரிக்கப்பட்டு, ஆளும் கட்சிக்கு வாக்களிக்கப்பட்ட உண்மை தற்போது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. பொதுசன ஐக்கிய முன்னணியில் இருந்து ஐக்கிய தேசியக்கட்சிக்குச் சென்றுள்ள லக்ஸ்மன் கிரியெல்ல, இதனை பத்திரிகையாளர் மத்தியில் பகிரங்கமாகவே தெரிவித்தார்.

கண்டியில் நடந்த தேர்தல் முறைகேடுகள் குறித்து, பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையும், ஒருவருடம் கழித்து ஒத்துக்கொள்ளவே செய்கின்றார். கடந்த 23ம் திகதி, கண்டியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், இதனை ஒத்துக்கொண்ட ரத்வத்தை, ஆனால், அதற்கு தற் போதைய தேர்தல் முறையே காரணம் எனத் தெரிவித்துள் ளார். தனது மகன்கள் துப்பாக்கிகளுடன் குண்டர்படையுடன் அலைந்து மேற்கொண்ட அடாவடித்தனங்கள் அட்டகாசங்களை வசதியாக மறைத்துள்ள ரத்வத்தை, இத்தத் தேர்தல் முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டால்தான் இத்தகைய பிரச்சினைகள் இல்லாதொழியும் எனத் தெரி வித்துள்ளார்.

சிங்களத்து நிலவரங்கள் இவ்விதம் இருக்க, வடக்கு கிழக்கில், தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. குறித்த அச்சத்தில் இருக்கின்றது. அமைச்சர் என்ற முறையில், டக்கிளசிடம் ஆளணி, படை, பணம், அதிகாரம் என்பன இருக் கின்றன எனத் தெரிவிக்கின்றன. குடாநாட்டில், குறிப்பாக தீவுப்பகுதியில், சர்வதேச கண்காணிப்பாளர்களின் கண்காணிப்புத் தேவை என்பது தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் கோரிக்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திரிசங்கு சொர்க்க நிலையில் சந்திரிகா அரசு



எல்லாளன்

**இராணுவ — பொருண்மிய — அரசியல் ரீதியில் தமது அரசு பாரிய சிக்கல்களைச் சந்தித்துள்ளதென்பதை பேரினவாதிகள் ஏற்றுக்கொண்டாலும், போரை நிறுத்தி அரசியல் தீர்வு தேடும் எண்ணம் அவர்களுக்கு உண்மையில் இல்லை.**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வரலாற்றுப்பிறப்பெடுத்து 25 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இந்த 25 வருட போராட்ட வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு, சிங்கள அரசு, பாரிய இராணுவ- பொருண்மிய- அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. கட்டுநாயக்க மீதான தாக்குதலும்- அதன் விளைவுகளும் இத்தகையதொரு திரிசங்கு சொர்க்க நிலைக்குள் சிங்கள அரசைத் தள்ளிவிட்டது.

கடந்த ஏழு-எட்டு வருடங்களாக சிங்களப் பேரின வாதத் திற்கு இருந்த ஒரு சாதக அம்சமாக, சர்வதேச ரீதியில் இருந்துவந்த. அதன் ஆட்சியாளர் சந்திரிகா அம்மையாரின் "நற்பெயரும்" வீழ்ச்சி கண்டுவிட்டது.

இராணுவ- பொருண்மியச் சிக்கலுக்குள் சிங்கள அரசானது அகப்பட்ட போதெல்லாம் அதிலிருந்து மீள வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுத்துவந்த உலக நிதி நிறுவனங்களும்- நட்பு நாடுகளும் முன்புபோல கண்களை மூடிக்கொண்டு உதவி வழங்க இன்று தயாராக இல்லை. சந்திரிகா அரசாங்கத்தின் நம்பகத் தன்மை அரசியல் ரீதியில் அற்றுப்போனதே இதற்குப் பிரதான காரணம்.

இலங்கையின் தேசிய இனச்சிக்கலை அமைதி வழியில் தீர்ப்பதற்குத் தடையாக புலிகள் இயக்கமே இருந்து வருகின்றது என்ற சிங்கள அரசின் பரப்புரையை ஒருதலைப்பட்சமாக ஏற்று புலிகள்மீது பகைமை பாராட்டிய இலங்கையின் நட்பு நாடுகள் பல இப்போது தமது கருத்துக்களை மாற்றிக்கொண்டிருக்கின்றன.

கடந்த காலங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைக்காக புலிகள் இயக்கம் முயற்சித்த செயல்ரீதியான அணுகுமுறைகளையும்- அதை நேர்மையாகக் கடைப்பிடித்த செயல்களையும் உலகம் முழுமையாக ஏற்றுக் கொண்டது.

ஆனால், சமாதானவிரும்பியாக தன்னைக்காட்டிக் கொண்ட சந்திரிகா அம்மையார், புலிகளின் சமாதான முயற்சிகளுக்கு சிறிதும் உதவவில்லை. அதேவேளை, சமாதான முயற்சிகளை குழப்புவதிலும்- போரை விரிவுபடுத்துவதிலும் சிங்கள அரசு ஈடுபட்டது. சந்திரிகா அரசாங்கத்தின் இச்செயல்கள் உலக சமூகத்திற்கு வெறுப்பைக் கொடுத்தது. சந்திரிகா அரசாங்கத்தின் சொல்லுக்கும், செயலுக்கும் சம்மந்தமில்லை என்று நேரடியாகக் கண்டு கொண்டது. சர்வதேச சமூகம் தனது அதிருப்தியை நேரடியாகவும், மறைமுகமாகவும் சிங்கள அரசுக்குக் காட்டியது. உதவிகள், கடன்கள் என்ற வகையில் சிங்கள அரசுக்கு வரும் நிதிப்பலத்தின் பெரும்பகுதி போர்ச்செலவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. என்பது நீண்டகால உண்மை. இதுகாரணமாகப் போரினால் வரும் பொருண்மியச் சுமைகள் சிங்கள மக்களின் தோழ்களில் விழுவது தவிர்க்கப்பட்டுவந்தது. எனவே, சிங்கள இளைஞர்களின் உயிரிழப்பு என்ற ஒரு அம்சத்தைத்தவிர சிங்கள மக்கள் போரினால் பெரிதும் பாதிக்கப்படவில்லை. தமிழர்க்கெதிரான போர் சிங்கள மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாததால் சிங்கள மக்களும் போரை விரும்பினர். போர்க் கொள்கையை முன்வைத்து ஆணை கேட்ட சந்திரிகா அம்மையாரை மீண்டும் ஜனாதிபதி ஆக்கினர். சிங்களத்தின் அரசியல்வாதிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மார்க்கமாக தமிழருக்கெதிரான போரையே பயன்படுத்தி வருகின்றனர்.

சிங்கள அரசின் இந்த அரசியல் ஓட்டத்திற்கு அனுசரனையாக இருக்க இனியும் தாம் தயாராக இல்லை என்ற செய்தியை உலக நிதி நிறுவனங்களும், உதவி வழங்கும் நாடுகளும் சிங்கள அரசுக்கு உணர்த்தி விட்டன.

போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்படி அவை சிங்கள அரசுக்கு நெருக்கடி கொடுக்கின்றன. இதையும் மீறி போர் நடாத்த முடிவெடுத்தால் அதற்குரிய நிதி வளத்தை நீங்களே தேடிக்கொள்ளுங்கள், என்று கூறி அவை ஒதுங்கவும் முயல்கின்றன.

அத்தியாவசியப் பொருட்கள்மீது கூடுதல் வரி அறவிட்டு போருக்காக நிதியைப் பெறும்படி உலக வங்கி கருத்துக்கூறியுள்ளது. போரின் முழுச்சுமையையும் சிங்கள மக்கள் அனுபவிக்கட்டும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே அது கருத்துக்கூறியுள்ளது. அப்போதுதான் போரை மையப்படுத்தி நடைபெறும் இரத்தம் சிந்தும் அரசியலுக்கு ஒரு முடிவு பிறக்க வாய்ப்பேற்படும் என்றும் உலக வங்கி எண்ணுகின்றது. இது தனியே உலக வங்கியின் கருத்தாக மட்டும் இருக்காது. உலக வங்கிக்கு நிதி வழங்கும் உலக நாடுகளினதும் கருத்தாகவும் இருக்கும்.

ஆயினும், உலக சமூகம் எண்ணுவதுபோல நடக்க வாய்ப்புண்டா என்பது சந்தேகமாகவே உள்ளது. சிங்கள தேசம் சந்தித்துள்ள தேசிய நெருக்கடியை உணர்ந்து இந்த நெருக்கடிக்கு மூலகாரணமான தமிழரின் இனப் பிரச்சினையை அரசியல்ரீதியில் தீர்த்துவைக்க சிங்கள மக்கள் ஆணையிடுவார்களா? அல்லது போர்ச்சுமையை தாங்களே முழுமையாகத் தாங்கிக் கொண்டு சிங்கள தேசம் குட்டிச்சுவராகும்வரை போர்புரிய விரும்புவார்களா? என்பதற்குப் பதில் சிங்கள மக்களிடமும், அதன் அரசியல்வாதிகளிடமுமே உள்ளது.

இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவரின் கைகளில் சென்றடைந்த 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழின அழிப்பே சிங்கள அரசின் தேசியக் கொள்கையாக இருந்துவருகிறது. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் மலையகம் வாழ் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்ற அகதிகள் ஆக்கியது. இலங்கை நாடாளுமன்றத்தில் அவர்களுக்கிருந்த அரசியல் பலத்தைப் பறித்து அரசியல் அனாதைகள் ஆக்கியது. அத்துடன், கிழக்கு மாகாணத்தில் தமிழர் நிலங்களைக் குறிவைத்து அங்கே சிங்களக் குடியேற்றங்களை அமைத்து நில அபகரிப்பைத் தொடக்கி வைத்தது.

இதற்கு இன்னுமொருபடி மேலே சென்ற பண்டாரநாயக்கா, எங்கும் சிங்கள மொழி, எதிலும் சிங்களவர்களே என்று வெறி கக்கி ஆட்சிப்பீடமேறி தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் இரண்டாம் தர மக்களாக அரசியல் அமைப்புரீதியாக அடக்கி வைத்தார். தமிழின அழிப்பிற்கு தூபம் இட்டு அதைத் தொடக்கி வைத்தார்.

தனிச்சிங்களச் சட்டம் பாராளுமன்றில் வாதத்திற்கு வந்தபோது சமத்துவம் பேசி அரசியல் தீர்க்கதரிசனங்கள் கூறிப் பெயர் எடுத்த சிங்கள இடதுசாரிகள், சிறிமாவோ அம்மையாருடன் இணைந்து கூட்டரசாங்கம் அமைத்த போது தமிழினத்திற்கெதிரான இனவெறி நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து துணைபோயினர்.

சோல்பரி அரசியலமைப்புவாயிலாக தமிழ் மக்களுக்கிருந்த சாதாரண இரகசிய பாதுகாப்பு சரத்துக்களையும் நீக்கிய சிறிமாவோ அம்மையார் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்துடன் சம்மந்தப்படாத அந்நியர்களாக தமிழ் மக்களை ஆக்கினார். பௌத்த மதத்தை ஆட்சி மதமாக்கினார். சிங்கள பௌத்த மேலாதிக்கம் அரசியல் சட்டமாக்கப்பட்டது. தரப்படுத்தல் என்ற நடைமுறை மூலம் தமிழரின் உயர்கல்வியும் வேலைவாய்ப்புகளும் பறிக்கப்பட்டன.

அடுத்து ஆட்சிபீடம் ஏறிய ஜே.ஆர் ஜெயவர்த்தன தனக்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் இயற்றிய இனவெறிச் சட்டத்தை தீவிரப்படுத்தியதுடன் தமிழினப் படுகொலையையும் முன்னின்று நடாத்தி தமிழினத்தின் மீது பெரும் போரையும் பிரகடனப்படுத்தினார். தமிழர் தாயகத்தைச் சிதைத்து அழிக்கும் திட்டத்துடன் வடக்-குகிழக்கு எங்கும் சிங்களவர்களை பெரும் எடுப்பில் குடியமர்த்த மகாவலி அமைச்சு என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களை வளர்த்தெடுக்க ஒரு அமைச்சகத்தையும் ஆரம்பித்து நில அபகரிப்பை உச்ச நிலைக்கு இட்டுச்சென்றார்.

முதலில் கிழக்கு மாகாணம் பின்னர் வட மாகாணம் என்று கொலைத் திட்டத்துடன் தமிழின அழிப்பில் ஈடுபட்ட பிரேமதாசா அரசாங்கம் ஒரு குறுகிய காலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஒரு பாரிய தமிழின அழிப்பைச் செய்து முடித்திருந்தார்.

இலங்கைத்தீவை தொடர்ச்சியாக பதினைந்து வருடங்கள் ஆட்சிசெய்த இந்த தலைவர்களினதும் இனவெறி ஆட்சியால் உலக அரங்கில் கறைபட்டுப்போய்க் கிடந்த சிறீலங்கா அரசை தூக்கி நிறுத்தியதுடன் ஒரு விதமான உலக அங்கீகாரத்துடன் தமிழின அழிப்பை ஆரம்பித்தார் சந்திரிகா அம்மையார்.

சந்திரிகாவின் ஆட்சியில் தமிழ் மக்கள் கொடூரமான அவலங்களையும் பாரிய இழப்புக்களையும் சந்தித்த போதும் புலிகள் இயக்கத்தின் தலைமையில் விடுதலைப் போரானது தீவிரப்பட்டு உச்ச நிலைக்குச் சென்றுவிட்ட யதார்த்தமும் சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்துள்ளது.

புலிகளை அழித்து விடுதலைப்போராட்டத்தை நசுக்கும் ஒரே இலக்குடன் பெருமளவு நிதிப்பலத்தை ஒதுக்கி அழிவுகரமான ஆயுத தளபாடங்களுடன் பல இராணுவ நடவடிக்கைகளை தமிழர் நிலத்தில் நடாத்தி அவற்றில் தோல்வி கண்டதுடன் சர்வதேச ஆதரவுகளையும் இழந்து சந்திரிகா அரசாங்கம் இன்று தனிமைப்பட்டுப்போயுள்ளது.

போர்த்தோல்வி பொருண்மியச்சிதைவு இதனால் சிங்கள மக்களிடம் தோன்றி உள்ள ஆட்சிக்கெதிரான உணர்வலைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து சந்திரிகா அரசாங்கத்தை ஒரு அரசியல் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளது.

சிங்கள அரசு சந்தித்துள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையை புலிகள் இயக்கம் பயன்படுத்திவிடக்கூடாது என்பதற்காக சிங்களக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவி சிங்கள அரசை சிக்கலில் இருந்து மீட்டெடுக்க பேரினவாதிகள் விரும்பினர்.

இந்த முயற்சிக்கு பச்சைப் பேரினவாதிகளான ஐக்கிய தேசியக் கட்சியினரும் விசப்புப் பேரினவாதிகளான ஜே.வி.பியினரும் நிபந்தனைகளுடனான ஆதரவுகளை அரசுக்கு நல்கமுயன்றன. இவர்களைப் பயன்படுத்தி ஆட்சியதிகாரத்தை தக்கவைக்கும் தந்திரத்துடன் அம்மையாரின் அமைச்சர்கள் அரசியல் பேரங்களில் ஈடுபட்டனர். இந்த அரசியல் திருவிளையாடல்கள் தற்போது ஓய்ந்துவிட்டது. இப்போது புதிய தேர்தல் ஒன்றைச் சந்திக்க சிங்களம் தயாராகிவிட்டது.

இராணுவ- பொருண்மிய- அரசியல் ரீதியில் தமது அரசு பாரிய சிக்கல்களைச் சந்தித்துள்ளதென்பதை பேரினவாதிகள் ஏற்றுக்கொண்டாலும் போரை நிறுத்தி அரசியல் தீர்வு தேடும் எண்ணம் அவர்களுக்கு உண்மையில் இல்லை. பதிலாக நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான ஒரு கால அவகாசம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதைப் பயன்படுத்திவிடவேண்டும் என்று காத்திருக்கின்றனர்.

ஆனால் இம்முறை அந்த வாய்ப்பு சிங்கள அரசாங்கத்திற்குக் கிடைக்குமா என்ற கேள்விக்கு பதிலறிய தமிழ் மக்கள் ஆவலாக உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்




21.10.2001 அன்று முல்லைக் கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறீலங்காக் கடற்படையினரை வழிமறித்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 1 கடற்கரும்புலி உட்பட 5 கடற்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

- **கடற்கரும்புலி மேஜர் ரோசா**
  **(கணேசன் கற்புக்கரசி)**
  **யாழ். மாவட்டம்.**
- **கடற்புலி மேஜர் சிவா**
  **(வேலாயுதம் தயாபரன்)**
  **யாழ். மாவட்டம்.**
- **கடற்புலி கப்டன் செந்தளிர்**
  **(இசிதோர் மேரிலுாட்ஸ்)**
  **யாழ். மாவட்டம்.**
- **கடற்புலி லெப். வினோதன்**
  **(யோகேஸ்வரன் திலீப்குமார்)**
  **கிளிநொச்சி.**
- **கடற்புலி கப்டன் செல்லப்பன்**
  **(இராமையா மகேந்திரன்)**
  **வவுனியா.**

---

26.10.2001 அன்று திருமலை மாவட்ட உப்பாற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடாத்த முனைந்த சிறீலங்கா விசேட அதிரடிப் படையினரை வழிமறித்து மேற்கொண்ட தாக்குதலில் மூன்று போராளிகள் வீரச் சாவடைந்துள்ளனர்.

- **கப்டன் நீலவாணன்**
  **(சுப்பிரமணியம் ராஜிக்கண்ணன்)**
  **திருமலை மாவட்டம்.**
- **கப்டன் அகத்தியன்**
  **(துரைசிங்கம் நகுலேந்திரன்)**
  **திருமலை மாவட்டம்.**
- **2ம் லெப். பூவிழி**
  **(கணபதிப்பிள்ளை ரோகினி)**
  **திருமலை மாவட்டம்.**

---

30.10.2001 அன்று சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமான இராணுவ விநியோகக் கப்பலான 'துகிந்த' கப்பல் மீது மேற்கொள்ளப்பட்ட வெற்றிகர கரும்புலித் தாக்குதலில் நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

- **கடற்கரும்புலி கடலரசன் / சமுத்திரன்**
- **கடற்கரும்புலி கனியின்பன்**
- **கடற்கரும்புலி அன்புமலர்**
- **கடற்கரும்புலி கஸ்தூரி**

---

கடந்த 02.11.2001 அன்று கடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகள் மீது சிறீலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கடற்கரும்புலிகள் உட்பட 6 கடற்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

- **கடற்கரும்புலி லெப்.கேணல் காந்தரூபன் / பெத்தா**
  **(கனகாந்தம் ஆனந்தக்கிருஸ்ணன்)**
  **யாழ்ப்பாணம்**
- **கடற்கரும்புலி கப்டன் குமாரவேல்**
  **(சுப்பிரமணியம் சுதர்சன்)**
  **யாழ்ப்பாணம்.**
- **கடற்கரும்புலி மேஜர் இலக்கியன்**
  **(சிவராசா ஹரிகரன்)**
  **முல்லைத்தீவு**
- **கடற்கரும்புலி கப்டன் வல்லவன்**
  **(நவநீதன் பத்மலதன்)**
  **யாழ்ப்பாணம்.**
- **கடற்புலி லெப் கேணல் சதீஸ்குமார்**
  **(பஞ்சலிங்கம் ஜீவாகரன்)**
  **திருமலை**
- **கடற்புலி கப்டன் உயிரோவியன்/குமார்**
  **(கதிரவேலு சிவச்சந்திரன்)**
  **யாழ்ப்பாணம்.**

# யுனிசெப்பின் போலியோ தடுப்பு மருந்தேற்றல் தினங்களில் அமைதி பேணும் ஒப்பந்தம் சிறீலங்காப் படையினரால் மீண்டும் மீறப்பட்டது

யுனிசெப் அமைப்பு ஒவ்வொரு வருடமும் மேற்கொண்டுவரும் குழந்தைகளுக்கான போலியோ தடுப்பு மருந்தேற்றல் திட்டம் இவ்வருடம் செப்டெம்பர் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளிலும், ஒக்டோபர் மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளிலும் மேற்கொள்ளப்படவிருந்தமையால் இத்தினங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் அமைதி பேணும் தினங்களாகப் பிரகடனப் படுத்தப்படிருந்தது. இதேபோல் கடந்த வருடங்களிலும் யுத்த நடவடிக்கைகளைத் தவிர்த்து, யுனிசெப் அமைப்புக்கு விடுதலைப் புலிகள் முழு ஒத்துழைப்பை வழங்கி வந்தனர் என்பது உலகறிந்த விடயம். இவ்வருடமும் விடுதலைப் புலிகள் போர் நடவடிக்கைகளை முற்று முழுதாக தவிர்த்து, கடந்த செப். 21ஆம், 22ஆம் திகதிகளை அமைதி பேணும் தினங்களாக கடைப்பிடித்த போதும் சிறீலங்கா அரச படைகள் இவ்வொப்பந்தத்தை மீறி போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை உறுதிப் படுத்தப்பட்டிருந்தது.

கடந்த 21ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் முகமாலை-கிளாலி பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீதும் அவற்றிற்கு பின்னாலும் சிறீலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இதேவேளை விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளப்படாத காரணத்தால், தமது நிலைகளை விட்டு முன்னே வந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் முன்னரங்க மறைப்பு வேலிகளையும் எரியூட்டி அழிக்க முற்பட்டனர்.

இதேபோல, 20ஆம் திகதி நள்ளிரவு, போலியோ தினத்திற்கான இருதரப்பு அமைதிபேணும் ஒப்பந்தமும் அமுலுக்கு வந்த நேரத்தில், சிறீலங்காப் படையின் விசேட அதிரடிப் படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவல் நடவடிக்கையில் ஈடுபட்டமையை விசேட தகவல்கள் உறுதிப்படுத்தியிருந்தன. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்பில் இருந்து பெறப்பட்ட தகவலின்படி, மட்டக்களப்பு புல்லாவெளி பெருகாமம் பகுதிகளிலேயே விசேட அதிரடிப்படையினர் இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர் என்பது தெரியவந்தது. பின்னர் புலிகளால் இவர்கள் பின் வாங்கிச் செல்லச் செய்யப்பட்டனர். இதனையே சிறீலங்காவின் அரச வானொலிகள் விடுதலைப் புலிகள் அமைதி பேணும் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக செய்திகளைத் திரித்துவெளியிட்டிருந்தன.

அரசின் இந்த நடவடிக்கையானது மனிதாபிமானத்தை அவமதிக்கும் செயற்பாடு மட்டுமன்றி பொதுமக்களின் நலனுக்காக இயங்கிவரும் யுனிசெப் போன்ற அமைப்புக்களின் சேவைகளையும் புறக்கணிக்கும் அநாகரீகச் செயற்பாடாகும் என ஊடகங்கள் கண்டனம் தெரிவித்திருந்தன. ஆயினும் இவை எவற்றையும் பொருட்படுத்தாது அரசு மீண்டும் அதே அநாகரீகச் செயற்பாட்டில் தனது படைகளை ஈடுபடுத்தியுள்ளது. இவ்வருடத்தின் போலியோ மருந்து வழங்கும் தினங்களின் இரண்டாம் கட்டமான ஒக்டோபர் 19ம், 20ம் திகதிகளும் அமைதி பேணும் நாட்களாகவே பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. இதை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையும் ஏற்றுக்கொண்டு, இத்தினங்களில் தாக்குதல் நடவடிக்கைகள் அனைத்தையுமே தவிர்க்கும்படி தனது படையணிகளுக்கு கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருந்தது.

மீண்டும், இவ்வருடத்தின் போலியோ தின ஒப்பந்தத்தை இரண்டாம் தடவையாக மீறும் வகையில் சிறீலங்கா இராணுவத்தினர் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை அறியப்பட்டுள்ளது. 19ம் திகதி காலை 9.30 மணியிலிருந்து 10-15 மணிவரை பளை, எழுது மட்டுவாள் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி காவலரண்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியாக 60MM மோட்டார் எறிகணைவீச்சு மேற்கொள்ளப்பட்டது என்பதை சிறீலங்காப் படையினர் ஒத்துக்கொண்டுள்ளதை இலங்கை வானொலிச் செய்திகள் உறுதிப்படுத்தியுள்ளன. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அரசதரப்பு ஆதாரமில்லாத தகவலை வெளியிட்டிருந்தது.

இது மட்டுமன்றி, 20ம்திகதி நண்பகல் 1.00 மணியளவில் மீண்டும் விடுதலைப் புலிகளின் கிளாலி முன்னரங்க நிலை மீது சிறீலங்கா இராணுவத்தினர் புதிய தாக்குதலை மேற்கொண்டனர். இத்தகவல்கள் வன்னிச் செய்திகள் நிறுவனச் செய்தியாளரால் நேரில் பெறப்பட்டிருந்ததுடன், உத்தியோகபூர்வ வட்டாரங்களும் இதை உறுதிப்படுத்தியிருந்தன. இதன்போதும் விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net





# தமிழீழம் இன்றும்-நாளையும்!

## சிறப்புக் கண்காட்சி





பிரான்ஸ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழீழ பொருண்மியம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய அறிமுகங்களுடன் கூடிய கண்காட்சி பாரிசில் 21.10.2001 அன்று காலை முதல் மாலை வரை நடைபெற்றது. மறைந்த லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சியில் தமிழீழ வரைவுகளும் திட்டங்களும் கணினிகளின் உதவியுடன் விபரித்துக் காட்டப்பட்டது.



சுற்றுப்புறச் சூழல் மற்றும் பசுமை வாழ்வு தொடர்பான அறிமுக தரவுகளைக் கொண்ட காட்சியறைகளும் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மேலும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிகள் விபரிக்கப்பட்டிருந்தன. இளையதலைமுறை பள்ளி மாணவர்களுக்கு இக்கண்காட்சி மிகப் பயனுள்ளதாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.












தமிழீழ விடுதலைப் போரில் முதன்முதலில் தனது உயிரை விடுதலைக்காய் அர்ப்பணித்த விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பின் பெண் போராளி 2ம் லெப். மாலதியின் 14வது ஆண்டு நினைவு நாள் கனடாவின் பல பகுதிகளிலும், ஜேர்மனியிலும் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டன. அந் நிகழ்வுகளிலிருந்து சில காட்சிகள்.

















தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கவிஞர்

## புதுவை இரத்தினதுரையின்

# ஊர்முற்றம்

# இனிவரும் காலம் உங்களுக்கு

ககன வெளியேறிக் கண்டங்களையும்
கடந்து வருகிறது
முற்றத்துவேம்பின் மூச்சு.
ஆழ்கடலின் பேரொலியையும் மீறிவருகிறது
காணத்துடிக்கும் உயிர்க்குடுவையின் தவனக்குரல்.
முற்றத்துக் கல்யாணமுருங்கை கையசைக்கிறது
சுற்றத்து வேர்களுக்குத் தெரிகிறதா?
சாவரும் கடைசி நொடியிலாயினும்
பார்த்துவிடத் துடிக்கிறது தூக்கிச் சுமந்த ஒக்களை.
எவர்போட்ட சாபமோ
வீட்டுத்திண்ணைகள் வெறிச்சோடிப் போயின
காணக் கண்கோடி வேண்டியதாயிருந்த
ஆனானப்பட்ட அழகுக்கு என்ன நடந்தது?
அட்டாளையரக்கக் கூட யாருமில்லையே
கட்டோடு கிடக்கிறது கிழடுதட்டிய காளைமாடு.
பால்வற்றிய பசுமாட்டுக்கு
இனி யார்வந்துதான் தீனிபோடுவது?
மூலைக்கை உக்கி முகடொழுகிக் கிடக்கிறது.
நாய்க்கும் பூனைக்குமா நாற்சார் வீடு?
ஊரிப்பட்ட உறவிருந்த ஊர்மனையை
வாரி அடித்துப்போனது வன்புயல்.
சிலும்பிப் போனது எம் ஜீவிதம்.
அற்றைப்பொழுதில் அழகிருந்த காலையில்
தேருக்கும்,
தீர்த்தத்திற்கும்,
பூங்காவனத்துக்குமென
முற்றம் நிறைந்திருக்கும் சுற்றம்.
கருமாதிச் சபைக்கும்,
கலியாணப் பந்திக்கும்
தலைவாழையிலைச் சாப்பாடு.
ஊரெங்குமிருந்து ஊற்றெடுத்துவரும் சொந்தம்.
அம்மானென்றழைக்கும் ஒன்று
மச்சானென்று கூப்பிடும் மற்றொன்று
உயிரிழைத்து மாமியென்றழைக்கும் ஒன்று
குஞ்சாச்சியென்று இன்னொன்று கூப்பிடும்
ஆச்சியென்றழைத்தாலோ அடிவளவே குளிர்ந்துவிடும்.
அன்பில் பிணைந்திருந்த ஆடுகால் பூவரசுகள்
மண்ணில் வேர்பிரண்டு கிடக்கின்றன.
கருவறைக்கிடங்கு அடிவற்றிப் போனது.
கண்பூத்துக்கிடக்கிறது கழுவாத தலைவாசல்.
மூத்தமகன் கனடா
மற்றமகன் நெதர்லாந்து
நடுவிலான் ஜேர்மனி
கடைசிமகள் டென்மார்க்கு
பேரன் நோர்வே
பெறாமகன் இத்தாலி
தம்பி லண்டன்
தங்கைச்சி அமெரிக்கா
இங்கே கிடந்து இழுக்கிறது பெரியக்கா.
சொல்லியழக்கூடச் சொந்தமில்லை என்றாச்சு.
தொண்டையில் முள்ளாய்க் கிடக்கிறது சோகம்.
இந்தக் கண்ணீர் மலைகளுக்கிடையேயும்
ஒரு சந்தோஷ நதி சலசலத்துப் பாய்கிறது.
குளிர்தேசம் நாடிய குஞ்சுகளே!
காலவிளக்கில் கணக்குப் பார்க்கும்போதுதான்
பிழையாவும் எம்மில்வந்து பொருந்துகிறது.
வானேறிப்போக உம்மை வழியனுப்பிவிட்டு
பிரிவுத்துயர் நெருப்பின் பொறிபட்டோம்.
கருப்பையின் கட்டளைக்குப் பணிந்து
விருப்பின்றித்தானே வெளியேறினீர்.
மண்ணின் வேரிழுத்துப்போக மறுத்தீர்
'என்னை ஏனம்மா அனுப்புகிறாய்'
சொல்லி அழுதபடிதானே தெருவிலிறங்கினீர்.
என் செய்வோம் குஞ்சுகளே!
ன்று ஊரிருந்த அவலத்தில்
ன்று நிதானிக்க நேரமிருக்கவில்லை.
டைதந்த குற்றத்துக்காக நாங்களும்,
விடைகொண்ட பாவத்திற்காக நீங்களும்,
மனச்சாட்சி மன்றில் மண்டியிடுவோம்.
தீமூண்டெரிகிறது எம் திருவாசல்
ஆயினுமென்ன?
தாயாளிங்கே தனித்துக் கிடக்கவில்லை.
கோடி உறவோடுதான் கொலுவிருக்கிறாள்.
கொள்ளிக்குப் பிள்ளையில்லை யாயினும்
என்னை அள்ளியெடுத்தெரிக்க ஆயிரம் பேர்.
பனிவிழும் தேசம்போன பறவைகளே!
இனிவரும் காலம் உங்களுக்கானது.
உங்களையும் நம்பித்தான்
விடுதலைத்தேர் உருள்கிறது.
செருக்களத் தேரின் கடையாணி வார்ப்புக்கு
திருப்பணி செய்வீர்.
பகையின் உயிருறுஞ்சிப்போகும் பாணங்களுக்கு
தேவை அதிகமெனத் தெரிகிறது.
வாங்கியனுப்ப வழிசெய்வீர்.
சிறகெடுத்துப்போன சிட்டுக்குருவிகள் தானாம்
உறவுகளுக்கிப்போ உயிர் வார்க்கிறதாம்.
ஆற்றாது நாங்கள் அழுகின்ற போதில்
ஊற்றெடுத்துப் பாய்ந்து வருகிறது உதவி.
எவரிடமும் கையேந்தியதில்லை
இதுவரை நான்.
பெற்றதாய் பிள்ளைகளிடம் கேட்பதில்
வெட்கமென்ன?
தாவென்று கேட்பதற்குத் தாய்க்கும்,
தருகிறேன் என்பதற்கு சேய்க்கும்
உரிமையும் கடமையும் உண்டு.
உரிமை எனது
கடமை உமது.
புலம்பெயர்ந்து போன பிள்ளைகளே!
தாய்க்கு நிகரானதல்லத் தாய்நிலம்.
அது தாய்க்கும் மேலானது.
அன்னை மடித் தொட்டில் விட்டிறங்கி.
ஆடிய பூமிக்கு ஈடிணையேது?
தமிழீழம் பகலிற் படுத்திருப்போன் காணும் கனவல்ல
எட்டித்தொடும் தூரமாகிய இலக்கு.
இது உயிர்விலை கொடுத்து மூட்டிய நெருப்பு
எப்படி அணையக்கூடும்?
விரைவிலெமக்கு விடுதலை எட்டும்.
காற்றிலேறித் திசையெங்கும் உலாப்போகும்
எம் உயிருருகிப் பாடும் பாடல்.
'எங்கும் விடுதலை
எமக்கும் விடுதலை'
இது ஈழத்தமிழரின் இதயத்துடிப்பு
இங்கு எள்ளுப்பூ கூட எழுந்துள்ளது.
இருள்கவிந்த மேகம் கலைந்தோட
விடுதலைக்கான கதவூடு வெளிச்சம் பரவுகிறது.
இப்போ உழவு நடக்கிறது.
உங்களுக்குமான உழவுதான் இது.
ஊரில்லை யென்பதால்
உறவறுந்து போய்விடுமா?
வேரில் பூத்த உறவை எப்படி வெட்டமுடியும்?
உழவு நடக்கிறது.
ஒருபுறம் விதைப்பும் நடக்கிறது.
உரமெறியத்தான் உங்கள் உதவி வேண்டும்.
வளர்த்துவிடுங்கள்
சூடடிப்புக்கு நீங்கள் வீடு திரும்பலாம்.
என்ன விலை கொடுத்தாயினும் வெல்வோம்.
பொன்னள்ளித் தூவும் வானத்தின் கீழே
மண்ணைப் புதிதாய் வரைவோம்.
வாழ்வின் அழகோடு எம்வாசல் விளங்கும்.
வாசல்கள் உங்கள் வரவு பார்த்திருக்கும்.
நாளை நடக்காமலா போகும் இது.
நம்பியிருப்பீர்.
நடக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தந்தையாரின் தேசப்பற்றும், அரசியல் ஈடுபாடும் இளவயதினிலேயே இவன் நெஞ்சத்தில் ஊறிவிட்டது. அதனால்தான் பாடசாலைப் பருவத்திலேயே இவன் போராட்டப் பங்களிப்பில் கலந்தான். அரச அடக்குமுறைகளுக்கு எதிராக மாணவர் போராட்டங்களில் கலந்து மாணவர்களை விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக ஒன்றிணைத்தான்.

உயர்தர வகுப்பு மாணவனான தினேஷ், இறுதிப் பரீட்சையை எழுதவில்லை. அது அவனுக்கு அவசியமாகவும்படவில்லை. தன்னின மக்கள் துன்பப் புதைகுழிக்குள் வீழ்ந்து கிடக்கையில், கைகள் கட்டி வேடிக்கை பார்ப்பதற்கு அவன் தயாராக இல்லை. தனது மண்ணை மீட்பதற்காகவும் மக்களின் அடிமை நிலையை மாற்றுவதற்காகவும் உண்மைப் போராளிகளுடன் இணைந்து கொண்டான்.

புலிகளுடன் இணைந்து பயிற்சிக்கு முதலே, பொதுவான சில வேலைகளில் ஈடுபட்டான். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புதிய போராளிகளை அணிதிரட்டிய தினேஷ், அவர்களுடனேயே பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்தான். பயிற்சிகளில் இவனது ஈடுபாடும், உறுதியும் இவனது தனித்தன்மையைக் காட்டியது. இவனிடம் இயல்பாகவே இருந்த திறமையின் நிமித்தம், அரசியல் வகுப்புகளின் பின்பு, அரசியல்வேலை செய்வதற்காக, அக்கராயன், வன்னேரிக்குளம், சோணாவில் பகுதிகளில் நியமிக்கப்பட்டான். பின்பு, அவசியத் தேவையின் நிமித்தம், தினேஷ் நெடுங்கேணிப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டான். இங்கு ஆனந்தப்புளியங்குளம், குளவிசுட்டான், சன்னாசிப்பரந்தன், அடம்பன் பகுதிகளிற்கு அரசியற்பிரிவு வேலைகளுக்காக நியமிக்கப்பட்டான்.

மக்களின் பிரச்சினைகளில் தெளிவான சிந்தனையுடைய இவன் வறுமைப்பட்ட மக்களின் சிக்கலான வாழ்வு முறையை விளங்கிக்கொண்டு அவர்களுடன் ஒன்றாகக்கலந்து கொண்டான். சிக்கலான போராட்ட காலங்களின்போது நிர்வாகச் சீர்கேடு காரணமாக, மக்களின் வாழ்வு, சமூகச் சிதைவுகளில் சிக்குண்டு சீரழியாமல் காக்க வேண்டிய பெரும்பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அம்மக்களை கட்டுப்பாடான, ஒழுங்கான வாழ்வு முறைக்கு வழிகாட்டி, அவர்களது அடிமை வாழ்வு முறையை உணர்த்தி அவர்களை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டான். வன்னியில், மக்களிடையே தெளிவான நிலையை ஏற்படுத்தி. புலிகளின் மக்கள் பலத்திற்கு முறையான அடித்தளத்தை அமைத்ததில், தினேஷின் பங்களிப்பும் நிறைந்துள்ளது. தினேஷினது திறமையின் பிரதிபலிப்பாக...

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இராணுவ நெருக்குதல் மிகவும் அதிகமான இப்பிரதேசம், போராளிகளின் வாழ்வு முறைக்கு சிறிதும் ஒத்துவரவில்லை. இராணுவத்தினரதும், துரோகிகளினதும் அதிகரித்த நடமாட்டங்கள் காரணமாக, பொது மக்கள்கூட போராளிகளுக்கு ஒத்துழைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் அங்கு கடமை புரியச்சென்ற தினேஷ், மக்கள் ஆதரவுதான் எம்மை அங்கு நிலைபெறச் செய்யும் என்பதை உணர்ந்துகொண்டான். அதனால்தான் தொடர்ந்த ஆபத்துகளிற்கிடையிலும் அவனால் அங்கு தொடர்ந்து நிற்கக்கூடியதாக இருந்தது. ஒட்டுசுட்டான் பகுதியில் ஆரம்பத்தில் எமக்கு சிக்கலாகவே இருந்தது. காலப்போக்கில் தினேஷினது கடுமையான உழைப்பின் விளைவாக பெரும்பாலான மக்களின் நிறைந்த ஆதரவும், பங்களிப்பும் எமக்குக் கிடைத்தன. இதற்கு இப்பகுதியில் புலிகளின் மக்கள் பலத்தை அங்கு எமக்கு ஆதரவாக நடைபெற்ற ஊர்வலங்களிலும் பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொண்ட மக்களின் பெருந்தொகையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

தினேஷ் வறுமைப்பட்ட எமது மக்களின் நல்வாழ்விலும், சமூக ஆதிக்கம் நிறைந்தவர்களின் அடக்குமுறை வடிவங்களிலிருந்து அவர்களைக் காப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தான். இழப்பதற்கு எதுவுமற்ற வறிய மக்களே எத்தகைய நிலையிலும் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்படுவார்கள் என்ற கருத்தை உடையவன் அவன். ஏற்றத்தாழ்வுகள் உள்ள கொடிய சமூக அமைப்பு முறையை மாற்றி சமத்துவ சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் நாட்டமுள்ளவன் தினேஷ். மக்களையும், இயற்கையையும் சமூகவிரோதிகளிடமிருந்து காப்பதற்காக இரவு பகலாக விழிப்புடன் செயற்படவும் வேண்டி இருந்தது. கசிப்பு வடிப்பவர்களிடமிருந்தும், கொள்ளையர்களிடமிருந்தும் மக்களைக் காப்பாற்றிய அதேவேளை, கள்ள மரம் அறுப்பவர்களிடமிருந்து இயற்கையையும் காப்பாற்ற வேண்டி இருந்தது. எம்மக்களின் போராட்ட உணர்வைத் திசை திருப்புவதற்கெனவும், இளைஞர்களைத் தவறான திசையில் கொண்டு செல்வதற்குமென, விரோதிகளால் பரப்பப்பட்ட தவறான திரைப்படங்கள், புத்தகங்களைத் தடைசெய்து சமூகத்தைக் காப்பாற்றவும் வேண்டி இருந்தது. விடுதலைப்போராட்டம், எங்கள் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்ததுதான், ஆனால் நாம் வீரம் மிக்க கலாச்சார சீரழிவு அற்ற பண்பான சமூகம் ஒன்றை உருவாக்க கடுமையாக உழைத்தோம்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கப்டன் தினேஷினால், எம்மக்களின் கட்டுப்பாடான வாழ்க்கை முறைக்கும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும், விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பதற்குமாக பல மக்கள் அமைப்புகள் உருவாக்கப்பட்டது. இணக்கசபைகள் என்ற கிராம நீதிமன்றங்களையும், அத்தியாவசிய சேவைகள் குழு என்ற சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான குழுக்களையும், மகளிர் அன்னையர் முன்னணிகளையும், விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்புகளையும் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தினான். இவை அனைத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்மையான பங்களிப்பைச் செய்தன. அதேவேளை பொது மக்களின் சமூக வாழ்வையும் சீரிய முறையில் கொண்டு சென்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில், அப்பகுதி மக்களிடையே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கதை நிலைப்படுத்தி, அவர்களின் நெஞ்சங்களில் இவன் இடம் பிடித்ததால்தான் இந்தியரின் ஐந்து படைமுகாம்களுக்கு நடுவிலும் இவனால் வாழ முடிந்தது. திறமையுடன் செயற்பட முடிந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பூரணமான தெளிவும், அரசியல் வேலையில் திறனும் இருந்தும் தினேஷ் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்கவும், தாக்குதல் குழுவில் இருக்கவுமே விரும்பினான். என்றாலும் இயக்கமிட்ட பணியை திறமையுடனும், உறுதியுடனும் செய்து வந்தான்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களை மிகவும் வெறுத்தான். அவர்கள் உதவி செய்வதற்குவரவில்லை என்பது அவனுக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் இந்தியப் படையினரின் கொடுமையான நடவடிக்கைகளும், கேவலமான செயல்களும் அவர்கள் மீதான வெறுப்பை மேலும் அதிகரித்தது. எழுச்சியடைந்த மக்களை அடக்கி அழித்துவிடலாம் என நினைத்த இந்திய அரசிற்கு இங்கு தகுந்தபாடம் கற்பிக்க வேண்டும் என்ற உறுதி உடையவன். மக்களால் சமூகத்தின் விரோதிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்ட E.P.R.L.F.ஐப்பற்றியோ ஏனையவர்களைப் பற்றியோ அவன் எண்ணவில்லை. ஏனெனில் இந்தியப்படையினருக்கு முதலே அவர்கள் இந்தியாவிற்குச் சென்று விடுவார்கள் என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

தினேஷ் எப்பொழுதுமே பிரச்சினைகளும், சிக்கல்களும் நிரம்பிய பகுதியிலே வேலைசெய்வதற்கு விரும்பினான். ஒருவராலும் முடியாததை தான் செய்யவேண்டும் என்றும் விரும்பினான். தனது போராட்ட வாழ்வின் ஒரு பகுதியை ஒட்டுசுட்டான் பிரதேசத்திலேயே கழித்து அங்கு போராட்டத்திற்குச் சாதகமான பல மக்களமைப்புகளை ஏற்படுத்தியதோடு, அங்கு-நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளிலும் பங்குபற்றினான். அதேநேரம் இயக்கத்திற்கென பல புதிய போராளிகளையும் இணைத்துக்கொண்டான்.

அதன் பின்பு சில காலம் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியற் பொறுப்பாளராக கடமையாற்றிய தினேஷ் பின்பு. முல்லைத்தீவு மாவட்ட அரசியற்பிரிவு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அவனுக்கு, இந்தியப்படையினரின் கடுமையான நடவடிக்கைகளிற்குள்ளும், மக்களிடையே இயக்கத்தைப் பலப்படுத்தி, வளர்த்தெடுப்பதில் சிரமமிருக்கவில்லை. ஏனெனில் மக்கள் உண்மையை உணர்ந்திருந்தனர். தம்மீதான எல்லா அடக்குமுறைகளையும் உணர்ந்திருந்தனர். அடிமைகளாக வாழ்வதில்லை என்று அவர்கள் முடிவெடுத்திருந்தனர்.

தினேஷ் தனது நற்குணங்கள் மூலம் அனைவரையும் கவர்ந்திருந்தான். அவனது அமைதியான சுபாவம், விவேகமான நடவடிக்கைகள், நன்றாகவே பழகும் தன்மை ஆகியவற்றால் அவனிடத்தில் அவன் பழகிய மக்களும், சக போராளிகளும் நிறைந்த அன்பையும். மதிப்பையும் வைத்திருந்தனர்.

**12.8.1989 அன்று,**

பழம்பாசியை அண்டிய காட்டுப் பகுதிக்குள் எம்மவர்கள் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் வழமையான அவதானத்துடன், எத்தகைய நிலைமையையும் சமாளிக்கக்கூடிவாறு சென்று கொண்டிருந்தனர். தினேஷ் தனது இடுப்பிலிருந்த பிஸ்டலை சரிசெய்து கொண்டான். திடீரென எடுக்கக்கூடியவாறு இருக்கிறதென்பதை உறுதிப்படுத்திக் கொண்டான். அக்காட்டிற்குள் குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் எம்மவர்கள் சிலரைச் சந்திக்கவேண்டும். அந்த அடர்ந்த சோலையான காடு நிசப்தத்தில் மூழ்கி இருந்தது. ஆனால் இவர்களின் வரவை எதிர்பார்த்து இந்தியரின் புகழ்பெற்ற அணித்துருப்பினர்கள் காத்திருப்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லை.

எம்மவர்களில் முன்னே சென்றவன் கூறினான். இராணுவத்தினரின் சப்பாத்துக் காலடிகள் உள்ளன என்று. காலடிகளை பார்த்துவிட்டு இந்தத்திசையில் தான் போயிருக்கிறாங்கள் என தினேஷ் கையைக்காட்டினான். அவர்களுடன் இருந்த அவர்களது பொறுப்பாளர், இராணுவத்தினர் முன்னால்தான் படுத்திருப்பார்கள் முறையான ஒரு அடி கொடுப்போம் என்றார். போராளிகளில் ஒருவன் 'ஆமி' என்று உசார்ப்படுத்தினான். படையினரைக் கண்டவுடன் இரண்டு பக்கங்களிலும் நெருங்கி எம்மவர்கள் தாக்குதல் நடத்தினர். வீராவேசமாகத் தாகிக்கொண்டே எம்மவர்கள் முன்னேறினார்கள். அவ்விடத்தில் இருந்த இந்தியப் படையினரில் ஒருவன் ஓடிக்கொண்டிருந்தான். ஏனைய ஆறு பேர் கொல்லப்பட்டிருந்தனர். அதேநேரம் ஆங்காங்கே மறைந்திருந்த இராணுவத்தினர் சுட்டுக்கொண்டே பரவலாக முன்னேறினர். அவர்களை நோக்கி எம்மவர்களின் துப்பாக்கிகள் இயங்கிக் கொண்டிருந்தன. கொல்லப்பட்ட இராணுவ வீரன் ஒருவனது S.L.R. துப்பாக்கியைக் கைப்பற்றி அதனாலேயே எதிரிகளைத் தாக்கத் தொடங்கினான் தினேஷ். நீண்டநேர யுத்தம் அவனது துப்பாக்கியின் தோட்டாக்களை காலியாக்கின. தனது தோழர்களை நோக்கி பின்வாங்கத் திரும்பினான் அதேநேரம் அவனது நெஞ்சினை இந்தியப் படையினரின் துப்பாக்கிகளின் ரவை ஒன்று துளைத்துச் சென்றது. அத்தாக்குதல் தொடர்ந்தது. பரா துருப்பினரில் 7பேர் கொல்லப்பட்டனர்.

எம்மவர்கள் திரும்பிக்கொண்டிருந்தார்கள், அவசரமாக அமைக்கப்பட்ட 'ஸ்ரெச்சரில்' தினேஷ் தூக்கிவரப்பட்டான். இராணுவத்தினரின் சப்பாத்துத் தடங்கள் பரவலாக தென்பட்டன. பெரிய அளவில் பரவலாக இறங்கி உள்ளனர். எதிரியை எங்கும் திடீரென சந்திக்கலாம். 'நான் போகப்போகிறேன், இறக்குங்கள், இறக்குங்கள்' என்றான் தினேஷ். கீழே இறங்கியவுடன் அவனது கண்கள் தனது தோழர்களை ஆவலோடுபார்த்தன. ஆனால் அவை சோர்ந்துபோகத் தொடங்கின. அவன் கையை உயர்த்தி ஆதரவைத் தேடினான். தோழன் ஒருவனின் கைகளை இறுகப்பற்றினான்.

'கப்டன் தினேஷ் வீரமரண மடைந்துவிட்டன்' மறுநாள்---- கப்டன். தினேஷினது உடல் இராணுவச் சீருடையில், அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவனது உடலைச் சுற்றி பூரணசீருடையில் எம்மவர்கள் அணிவகுத்திருந்தனர். தோழன் ஒருவன் பேசினான். 'சுதந்திர ------ தமிழீழம் எனும் புனிதமான இலட்சியத்திற்காக, கப்டன் தினேஷ் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார். அவரது பாதையை நாம் உறுதியுடன் தொட[...]வோம். அவருடைய இலட்சியத்தை நா[...] நிறைவேற்றுவோம்' தோழர்கள் உறுதி எடுத்துக் கொண்டார்கள். உயர்ந்த அவர்களின் கைகளில், அன்று கைப்பற்றிய ஆயுதங்கள் வானத்தைப் பார்த்தன. இனி அவை எங்கள் மண்ணை மீட்பதற்காப் போரிடும். ■

முல்லை மாவட்ட பொறுப்பாளர்

**கப்டன் தினேஷ்**

த. தமிழ்ச்செல்வன்

வீரச்சாவு - 12.8.89





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அவலங்கள் சூழ்ந்தபோதும் அழிந்து போகாத அழகியல் இரசனை

தமிழீழத் தாயகத்தின் வன்னிப் பிராந்தியம் பொருளாதாரத் தடைகளாலும், விமானக் குண்டு வீச்சுக்களாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் அவலத்தையும் துயரையுமே தனது நித்திய சொத்தாகக் கொண்டிருக்கின்ற இக்காலப் பகுதியில் வன்னியில் கிளிநொச்சி நகரில் மீண்டும் அழகியல் கலைகள் புத்துயிர் பெறுகின்றன என்றால் அது சாதாரணமான விடயமல்ல. வன்னியென்றாலே போரின் அனர்த்தங்களே உலகவாழ் தமிழர்கள் அனைவரினதும் நினைவுக்கு வரும் நிலை. ஏதோ ஒருவகையில். உண்மையென்ற போதிலும், வன்னித் தமிழர்கள் என்றுமே தங்கள் தனித்துவத்தை இழந்துவிடவில்லை என்பதை உணர்த்தும் சாட்சிகள்தான் இவை. தமிழர்களின் வாழ்வு என்பது தன்மானத்தையும், தனித்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை உணர்த்தும் தமிழீழ விடுதலைப் போராட்ட காலகட்டத்தில்கூட, தமிழ் மக்கள் அதிலும் குறிப்பாக வன்னித் தமிழர்கள் தங்கள் சுயத்தையும் சகஜ வாழ்வையும் என்றுமே மறந்துவிடவில்லை. போரும் இடப்பெயர்வுகளும் அகதிவாழ்வுமே வழக்கமாகிவிட்ட நிலையில்கூட, அதற்கும் தங்களை பழக்கிக் கொண்டவர்களாக அவர்களின் வாழ்வு தொடர்கின்றது. அவலங்களும் இழப்புக்களும்தான் விடுதலைக்கு கொடுக்க வேண்டிய விலையாக இருந்தபோதிலும், அவற்றினால் சோர்ந்துவிடாதவர்கள் வன்னித் தமிழ் மக்கள். அசைக்க முடியாத விடுதலை உணர்வோடு கூடப்பிறந்துவிட்ட தமிழ் மக்களை எந்தவொரு சக்தியாலும் நிலைகுலையச் செய்துவிடமுடியாது என்பதை உணர்த்தும் சான்றுகளே இன்று வன்னியில் அரங்கேறிக்கொண்டிருக்கும் பாரம்பரிய விழாக்களும் கலைபண்பாட்டு நிகழ்ச்சிகளும் ஆகும். வசதிவாய்ப்புக்கள் யாவுமே மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் வன்னியில் அழகியல் கலையானது பெற்றுவரும் வளர்ச்சி, தமிழர்கள் மனித உணர்வுகளுக்கும் இரசனைகளுக்கும் எத்துனை முக்கியத்துவமும் மரியாதையும் கொடுக்கின்றார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இந்தவகையில் நோக்கத்தக்க ஒரு நிகழ்ச்சிதான் வன்னியின் கிளிநொச்சி நகரில் 28.10.2001 அன்று மாலை 6.00 மணியளவில் இடம்பெற்ற பரதநாட்டிய அரங்கேற்றமாகும். கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் செல்வி திவ்ஜா விநாயகமூர்த்தி அவர்களால் சிறப்புற நிகழ்த்தப்பட்ட பரதநாட்டிய அரங்கேற்றமானது, கிளிநொச்சி நகர் தமிழர்களிடம் மீண்ட பின்னர் இடம்பெறும் முதல் அரங்கேற்ற நிகழ்வு என்றவகையில் சிறப்புப் பெறுகின்றது. சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகளால் வெறும் கற்குவியலாக்கப்பட்ட தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடமான கிளிநொச்சி, அழகியல் கலைகளுக்கு சிறப்புப் பெற்ற பிரதேசங்களில் ஒன்றாகும். சிறீலங்கா அரசின் அழித்தொழிப்பு நடவடிக்கைகள் கிளிநொச்சி நகரை சுடுகாடாக்கியது மட்டுமல்லாமல், அம்மண்ணின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களை, அவர்களது வாழ்வாதாரங்களை இழந்து பசியோடும் பட்டினியோடும் ஓட வைத்தபோதும், தமிழ் மக்களின் தனித்துவம் தகர்ந்து போய்விடவில்லை என்பதையே, மீண்டும் கட்டியெழுப்பப்படும் கிளிநொச்சியில் நிகழ்த்தப்பட்ட இந்த அழகியல் நிகழ்வு பறைசாற்றி நிற்கின்றது. தமிழர்களின் பாரம்பரியக் கலைகளான இயல் இசை நாடகங்கள் என்ற முத்தமிழ்க் கலைகளும் அரங்கியலும் அவல துன்டங்களால் இன்னும் மெருகேறியுள்ளனவே தவிர, கைவிடப்பட்டோ அழிந்தோ போய்விடவில்லை. வன்னியின் பாரம்பரிய இயல் வடிவமான கூத்து தற்போது எத்தனையோ நவீன மெட்டுக்களுடன் விருத்தி பெற்றிருக்கும் அதேநேரம், அண்டை தேசத்தின் ஆடல் வடிவமான பரதம்கூட வன்னியில் அரங்கேறும்போது புதுப் பொலிவைப் பெறுகின்றது. மக்களை மகிழ்விக்கும் நிகழ்வுகளாக மட்டுமல்லாமல், உணர்வுகளைப் பரிமாறும் ஊடகங்களாகவும் வடிவம் பெற்றுவிட்ட இவ் ஆடற்கலைகள் தமிழர் தனித்துவத்தையும் விடுதலையையும் விளம்புவனவாக, காலத்தின் தேவையறிந்து மாறிவருவதும் போற்றுதற்குரியது. தெய்வீகக் கலைகளாக விளங்கும் இவை புகட்டி நிற்கும் ஆன்மீக அமைதியும், தெய்வீக அன்பும் தமிழர்கள் போர்வெறி கொண்டவர்களல்ல என்பதை அடித்துநிறுவும் அம்சங்களாக இருப்பது வியப்புக்குரியதல்ல.



## வன்னியின் கிளிநொச்சி நகரில் ஓர் பரதநாட்டிய அரங்கேற்றம்

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வு வன்னியின் பிரபல கலைஞர்கள் பலரின் வாழ்த்துடன் சிறப்புற நிகழ்ந்தேறியது. தமிழீழ கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் உட்பட பல பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்கினர். பரதநாட்டியக் கலைமாமணி திருமதி. மனோரதி கணேசலிங்கம் அவர்கள் வழங்கிய ஆசியுரையில் 'ஆனந்தம் பயக்கும் அழகியல் கலையின் அத்திவாரமும் கோபுரமுமாக விளங்குவது நடனக் கலையாகும். வேதகாலத்தில் போற்றப்பட்ட இக்கலை வடிவம் படிப்படியாக வலுவிழந்து 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து காலச்சுழற்சியில் கௌரவக் கலையாக மாறியுள்ளது. வளங்கள் குறைந்தும் சிதைந்தும் போயுள்ள நிலையிலும் எமது கிளிநொச்சி மாவட்டத்தில் இக்கலையை முறையாகப் பயின்று அரங்கேற்றுவது என்பது வரலாற்றுக்கே பெருமை சேர்க்கும்' என்று குறிப்பிட்டார். 'கலை இலக்கியங்கள் மனிதகுலத்தை குதூகலிக்க வைப்பவை. இவை மனித மாண்பை மேம்படுத்துபவை. மேலும் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை. அவை சமூகத்தின் நி[illegible]பாக்கிசங்கள்' என்று குறிப்பிட்டார் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள். வி[illegible]ல்விக் கழகப் பொறுப்பாளர் தனதுரையில் 'அழகியல் கலைகள் மனித மனத்தை பரந்து விரிந்ததாகப் பண்படுத்துவதுடன் வேற்றுமைகளைக் களைந்து ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உறுதுணையாக அமைகின்றன. அத்தகைய முத்தமிழ்க் கலைகளில் தலையாய கலையாகிய ஆடற்கலையை முறையாகப் பயின்று இன்று அரங்கேற்றம் செய்ததானது, கிளிநொச்சி மண்ணுக்கு பெருமை சேர்ப்பதாகும்' எனத் தெரிவித்திருந்தார். இந்நிகழ்வானது, ஒரு தனிநபரின் திறமைகளை வெளிக்காட்டும் நிகழ்வாக அமையாமல் தமிழீழத்தின் கலை மறுமலர்ச்சியையும் வன்னி மக்களின் கலை ஆர்வத்தை வெளிக்காட்டும் நிகழ்வாகவும் அமைந்திருந்தமை பாராட்டத்தக்கது. இவை யாவற்றுக்கும் மேலாக தமிழர்களின் போர் முழக்கத்தை மட்டுமல்ல, கலை உணர்வைக்கூட எந்தவொருசக்தியாலும் சிதைத்துவிட முடியாது என்று அறைகூவல் விடுக்கும் வகையில் அமைந்திருப்பதை யாவரும் உணர முடிகின்றது. வேறு நாடுகளில் அல்லது கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களில் இவ்வாறான அரங்கேற்றங்கள் மிகச் சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன. அதேநேரம் செல்வந்தர்களின் செழிப்பையும் தமது பிரபலத்தையும் வெளிக்கொணரும் நிகழ்வுகளாக அரங்கேற்றங்கள் மாறிவிட்ட இந்நிலையில் வன்னியில் இடம்பெற்ற இந்நிகழ்வானது அவற்றைவிட எத்தனையோ படி மேலானதாக, தூய்மையான கலைச்சிந்தை கொண்டதாக விளங்குகின்றது. இடிபாடுகளின் மத்தியில் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடை ஒன்று அமைந்திருந்தமையானது வன்னி மக்களின் துவண்டுபோகாத உணர்வுகளுக்கு கட்டியம் கூறியதாக அமைகின்றது என்பதை நேரில் பார்க்கும் எவருமே மறுக்கமுடியாது. சிறீலங்கா அரசின் இன அழிப்புப் பரிமாணங்களின் ஒருபடியாக யாழ்ப்பாணத்தில் அறிமுகமாகிக் கொண்டிருக்கும் அழகுராணிப் போட்டிகள் என்ற மேலைத்தேய கலாச்சாரத்தில் இளம் சமுதாயம் மோகம் கொள்ளும் இந்நிலையில், வன்னி தனது ஒழுக்கக் கட்டுக்கோப்பை என்றுமே இழந்துவிடப் போவதில்லை. அரைகுறை ஆடைகளுடன் இளம் பெண்களை அரங்கேறச் செய்வதன் மூலம் மிகக் கேவலமான தசை வியாபாரத்திற்கான வித்தை யாழ். மண்ணில் விதைத்துவிட சிங்களப் பேரினவாதம் முயன்று வருவதை இன்று உலக மக்கள் ஓரளவு உணர்ந்துவிட்டார்கள். தமிழினத்தின் தூய்மையையும் கௌரவத்தையும் நீண்டகால அடிப்படையில் சிதைத்துச் சின்னாபின்னமாக்கிவிட துடித்துக்கொண்டிருக்கும் பேரினவாதப் பேய்களுக்கும் இது போன்ற நிகழ்ச்சிகள் ஒரு செய்தியை வழங்கவிருக்கின்றன. தமிழனின் ஒழுக்கவியலும் பாரம்பரிய கலை அம்சங்களும் பண்பாடும் என்றுமே தடம்மாறப் போவதில்லை. அதனை வழிமாற்ற முனையும் யாரையுமே மறத்தமிழ் மன்னிக்கப் போவதுமில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது மண் விடுதலையோடு மட்டும் நின்றுவிடப் போவதில்லை தமிழ்ப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் ஆக்கிரமிக்க முனையும் அந்நிய மோகத்திற்கெதிராகவும் தொடரப்போகின்றது. கலாச்சாரத்தைச் சீரழிக்கும் நச்சுவிதைகளை விதைக்கும் சக்திகள் எவையாக இருந்தாலும் அவற்றுக்கெதிராக பன்மடங்கு ஆக்ரோசத்துடன் ஆரம்பிக்கப் போகின்றது. தமிழீழ ஒழுக்கவியல் பண்பாட்டு விழுமியங்களைக் காக்கும் கலாச்சாரப் போர்முரசின் ஒரு அழகியல் அதிர்வுதான் கிளிநொச்சி நகர் கண்ட 'அரங்கேற்றமாகும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எதற்காக?



அதிகாலை 2.00 மணி வரைக்கும் அச்சுக்கோப்புவேலை. அதன் பிறகு நித்திரைக்குப் போனதில் பியசேனா கண் விழித்தபோது ஆறேமுக்கால்.

ஏழரை மணி பஸ்சைப் பிடிக்கும் அவசரம் அவனில் தெரிந்தது. முகம் கழுவி, கன்ரீனில் தேநீர் குடித்தான். அரை கிலோ கேக் வாங்கி பையில் வைத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாய் வாசலுக்கு வந்தபோதுதான் அது நடந்தது.

கோடை காலத்து இடிபோன்ற பேரோசை காதைப் பிளக்க அதன் அதிர்வில் கீழே விழுந்த பியசேனா சமாளித்து எழும்புவதற்கு முன் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

அவனுக்குப் புரிந்துவிட்டது. எங்கேயோ 'குண்டு' வெடித்திருக்கிறது. எங்கேயோ என்ன... அங்கேயே மிக அருகில். அலுவலக யன்னல்களின் கண்ணாடி கலீர் என நொருங்கிச் சிதறுமளவுக்கு அருகே.

வானத்தைத் துழாவிக் கொண்டு சுருள் சுருளாய்க் கிளப்பிய புகைதெரிந்தது.

'மகே அம்மே...!'

'கொட்டியா ஆவா!'

'ஐயோ !'

'ஒக்கம துவண்ட'

'கொட்டியா அபேத் மரண்ட யனவா....'

'மகே தெய்யனே... அப்பேத் ஆரக்ஷகரன்ன' கூக்குரலிட்டபடி சனங்கள் சிதறி ஓடினார்கள். வெடிச்சத்தங்கள் விடாமற் கேட்டன.

உள்ளே போய் நிற்பது பாதுகாப்பு என்றுபட பியசேனா திரும்பினான்.

நடுங்கியபடி ஒரு கும்பல் நடுக் கூடத்தில் நின்றிருந்தது. பகல் வேலைக்கென ஏற்கனவே வந்துவிட்டவர்களும், இரவு வேலை முடிந்து வீடு திரும்பத் தயாராய் நின்றவர்களுமாய். சுமார் அறுபது பேர் வரை.

உயிரைக் கையில் பிடித்தபடி வெளிறிய முகங்களோடு நின்றார்கள். பெண்கள் சிலர் விக்கலெடுத்து ஓவென அழுதுகொண்டிருக்க, வேறு சிலர் அவர்களைச் சமாதானப் படுத்திக்கொண்டிருக்க, அடுத்து என்ன செய்யலாம் என்பது பற்றிச் சிலர் திட்டம் போட்டுக்கொண்டிருக்க, பியசேனாவுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை.

நின்றிருந்த ஊழியர்களில் நாலைந்து தமிழரைத் தவிர மற்ற எல்லாரும் சிங்களவர். மிக அருகே குண்டுவெடித்து, வெடிச்சத்தங்கள் தீவிரமடைந்திருந்த நிலையில் அலுவலகத்தை விட்டு வெளியேறி தப்பிச் செல்வது நிச்சயமாய் ஆபத்தானது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டனர்.

வெளியே கேட்டுக் கொண்டிருந்த வெடிச்சத்தங்களும், ஆரவாரங்களும் உடனடியாக வெளியே போவது முடியாத காரியம் என்பதைக் கூறின. பெரிய கட்டடங்கள் சில அல்லது பல நொருங்கி வீழ்ந்திருக்க வேண்டும் என்பது உள்ளே நின்றவர்களின் ஊகத்துக்குப் பிடிபட்ட அதேவேளை-

துப்பாக்கி நபர்கள் ஐவர் பாய்ந்து உள்ளே நுழைந்தனர்.

அறுபது பேருக்கும் இப்போது உயிர் நடுங்கிற்று.

பயத்தில் அசையாமல் நின்றார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை அறுபது பேரின் கதையும் அங்கே முடியப்போவது தீர்மானமாகிவிட்டது.

இஷ்ட தெய்வங்களிடம் இதயத் தொலைபேசிகள் இறுதி வரம் கேட்டன.

உள்ளே நுழைந்தவர்கள் குண்டு வைத்த 'பயங்கரவாதி' களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்....

பியசேனா முன்தினம் மாலைப் பொழுதை நினைத்துக் கொண்டான்.

உணவுப் பொட்டலத்தைக் கையிலும், கனிவான சிரிப்பை இதயத்திலும் தந்து வழியனுப்பி வைத்த மனைவி.

ஓடி வந்து கழுத்தைக்கட்டி, வரும்போது கேக் வாங்கி வரும்படி செல்லக் கட்டளையிட்ட பிஞ்சு மகள், 'அவர்களை இனி நான் பார்க்கமாட்டேனா?'

'சீராங்கனீ... என் செல்ல மகளே, இனி நீ தந்தை இல்லாத குழந்தையா...?

நெஞ்சு வெடிக்கும் போலிருந்தது. ஐந்து பேரையும் பார்த்தான்.

'பயங்கரவாதிகள்' எப்படியிருப்பார்கள் என்ற கற்பனைக்கும், எதிர்பார்ப்புக்கும் அவர்களின் தோற்றங்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி ஒன்று இருந்ததை மனம் கணக்கிட்டது. ஈவிரக்கமற்றவர்கள், கொலை வெறிபிடித்தவர்கள் என்றெல்லாம் கூறப்படுகின்ற 'பயங்கரவாதிகள்' இவர்கள்தான் என்ற முடிவை உள்ளே நின்றவர்கள் எடுப்பதற்கு ஐவரின் தோற்றங்களும் உறுதியாய் மறுதலித்துவிட்டன.

ஐந்துபேரும் இளைஞர்கள்.

நிரம்பக் களைத்திருந்தார்கள். அவர்களில் வயது கூடியவன் போலத் தெரிந்த இளைஞனுக்கு இருபத்தைந்து வயது மதிப்பிடலாம். நல்ல உயரம், ஆஜானுபாகு, கண்களில் அசாதாரணமான ஒளி.

ஒருவனுடைய முகத்தில் இன்னமும் குழந்தைத்தனத்தின் ரேகைகள் எழுதப் பட்டிருந்தன.

உயரமானவனுடைய கட்டளைக்கு உடனுக்குடன் கீழ்ப்படியும் தோரணை அவர்களின் நடவடிக்கைகளில் தெரிந்தது.

பீதியில் உறைந்துபோய் நின்ற ஊழியர்களை நோக்கி உயரமானவன் வந்தான்.

பியசேனாவுக்கு அடிவயிறு கலங்கியது.

'சுடப்போகிறான் எல்லோரையும் சுடப் போகிறான் கடவுளே... என்ரை மனைவி... என்ரை மகள்....'

'இதோ... கிட்ட வந்திட்டான்... சுடப் போகிறான்...'

'நிச்சயமாய் இவன் கொட்டியாதான்...'

'வலது கையை அசைத்து.... துவக்கு விசையை... அழுத்தப் போகி...றா...,

'ஆ... என்ன இது? சைகையால் ஏதோ கேட்கிறான், தண்ணீர்'

'அப்பாடா!'

குழாய் இருக்குமிடம் காட்ட ஐவரும் தாகம் தீரக் குடித்தார்கள். அறுபது பேரின் மனதிலும் கொஞ்சம் தொஞ்சமாய் பதட்டம் தெளியத் தொடங்கியது. துப்பாக்கி இளைஞர்களின் முகங்களில் எழுதப்பட்டிருந்த உணர்வுப் பிரதிபலிப்பு ஏறக்குறைய ஊழியர்கள் அத்தனை பேரையும் பய உணர்விலிருந்து ஓரளவு விடுவித்து பிரமிப்புக் கலந்த புதுவகை உணர்வொன்றில் கட்டிப் போட்டுக்கொண்டிருந்தது.

துப்பாக்கிச் சத்தங்கள் மிக அருகில் கேட்டன. சிறிது நேரத்தில் அலுவலகம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

'என்ன நடக்கப்போகிறது'

ஊழியர்கள் முகங்களில் மீண்டும் பீதி முகாமிட்டது. 'பயங்கரவாதிகள்' பற்றிய பயம் இப்போது இரண்டாம் பட்சமாகிவிட, ஐந்து பேருக்கும் இராணுவத்திற்குமிடையே மோதல் தொடங்கினால், (சந்தேகமென்ன... அது தொடங்கத்தான் போகிறது) இடையில் அகப்படவிருக்கும் தங்களின் கதி என்னாகுமோ என்ற கேள்வி அவர்களுக்கு முன்னால் விஸ்வரூபம் கொண்டது.

அறுபது உயிர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அப்போதைக்கு இராணுவத்தின் கைகளில் இருந்ததால் உடனடியாக மோதல் வெடிக்கப்போவதில்லை. ஆனால் ஏதோ ஒன்று நடந்தேயாகவேண்டும்.

'அது என்ன? எப்போது நடக்கும்?'

இப்படி யோசித்தபோது பியசேனாவுக்கு உள்ளூர திகில் பரவிற்று. 'அறுபது உயிர்கள் ஐந்து பேரிடம் பணயம் ஆகிவிடுமோ?'

'அப்படி நடந்தால் எப்படி முடியும்?'

இளைஞர் மீது அவன் பார்வை படிந்தது.

ம்.... உம்.... எதையும் சொல்ல முடியவில்லை. முகங்களில் அதே நிதானம். ஆனால் தீர்மானம் எடுத்துவிட்ட உறுதி அந்தக் கண்களில் பியசேனாவுக்குத் தெரிந்தது.

துப்பாக்கிதாரிகளின் தீர்மானம் என்னவாயிருக்கும்...? ஐந்துக்கும் அறுபதுக்குமிடையில் நிலவிய மௌனத்தின் மீது மீண்டும் ஒரு தரம் கல்லெறியப்பட்டது.

இப்போதும் அவன்தான்.

கிட்ட வந்தான் சைகையால் சொன்னான், 'நீங்கள் எல்லோரும் ஏதாவது குடியுங்கோ... சாப்பிடுங்கோ...' யாரும் அசையவில்லை. பதட்டத்தில் பசியும் தாகமும் தொலைந்திருந்தன. ஊழியர் ஒருவர் அவனுக்கு முன்னால் போனார்.

'எனக்கு ரெண்டு பிள்ளைகள்.... என்னை ஒண்டும் செய்து போடாதேங்கோ' சைகையும் சிங்களமும் சேர்த்துச் சொன்னார். குரல் மன்றாடியது.

ஆயிரம் அர்த்தம் கொண்ட புன்னகை மின்னலொன்று ஐந்து முகங்களிலும் தெறித்து மறைந்தது.

உயரமானவனுடைய சிறுதலையசைப்பு அவருக்கு அபயமளித்தது. அனைவருக்கும் தான்.

பியசேனாவுக்கு இது ஆச்சரியமாயிருந்தது.

'பயங்கரவாதிகள்' இன்னும் ஏன் எங்களைச் சுடாமல் வைத்திருக்கிறார்கள்....

'இந்தத் தாமதம்கூட ஒருவித சூழ்ச்சியோ...?'

'அறுபது மனிதர்களின் உயிர்கள் உள்ளே என்ற துணிவில்தான் பதட்டமில்லாமல் நிற்கிறார்கள்...'

'பணயம்தான் வைக்கப்போகிறார்களோ....?'

'இருக்காது... அந்தக் கண்களில் பகைமை இல்லை... அவற்றில் தெரிவது ஏதோ ஒன்று....'

அது என்னவென்று பியசேனா உணர்ந்தானில்லை. பல வகை எண்ணங்கள் அவன் மனதில் மாறிமாறி வந்தன.

பயங்கரவாதிகளிடம் காணப்பட்ட அந்த உணர்வு என்னவென்று இனங்காணாவிட்டாலும் அது கொலை வெறியல்ல என்ற முடிவு இப்போது பியசேனாவுக்குள் பிறந்துவிட்டது.

நண்பகல் நெருங்கிக்கொண்டிருந்தது.

இன்னும் எதுவும் நடக்கவில்லை.

ஏதோ ஒன்று நடந்தேயாக வேண்டும்.

பதட்டமும் ஏக்கமும் ஏறக்குறைய அத்தனை ஊழியர்களையும் தாம் மரணத்தின் வாசலில் நிற்பதாய் பயம்கொள்ள வைத்தன.

'நீங்களெல்லாரும் வெளியே போகலாம்' மூன்று மணிக்கு அறுபது உயிர்கள் மீண்டும் வாழ்க்கையின் வாசலுக்கு இடம் மாறின.

நிம்மதி மூச்சுக்கள் நீளமாய்க் கிளம்பின.

ஆனால், திடீரென வெளியே போவதா? சூழ்ந்து நிற்கும் இராணுவம் பயங்கரவாதிகள் என்று நினைத்துச் சுட்டுவிடக்கூடும்.

'ஊழியர்கள் அனைவரும் வெளியே வரப்போகிறோம்' படையினருக்கு கேட்கும்படி ஊழியர் ஒருவர் இரண்டு மூன்று தடவைகள் உரத்துச் சொன்னார்.

சிறிது நேரம் பதிலில்லை.

உயரமானவன் ஏதோ சொல்ல, ஐவரும் ஆளுக்கொரு இடத்தில் நிலையெடுத்துக் கொண்டனர்.

**அஜந்தி**

தங்களின் வெளியேற்றத்துக்காகக் காத்திருந்த போர்க்களம் இன்னும் சில நேரத்தில் உள்ளே நுழைந்துவிடும் என்பதைப் பியசேனா கற்பனை செய்தான். இளைஞர்களின் நிதானம் இன்னமும் கலையாமல் இருந்தது திகைப்பாயிருந்தது.

படையினரின் உத்தரவு வந்தது. கைகளை உயர்த்தியபடி ஒவ்வொருவராய் வெளியேற வேண்டும்.

கடைசியாய் நின்றவன் பியசேனா.

படியில் கால் வைக்குமுன் அவனையறியாமல் பார்வை உள்ளே துழாவுகிறது. ஐந்து சோடிக் கண்களையும் ஒரேவீச்சில் சந்தித்த அவனது கண்களில் தெறித்து விழுந்த உணர்வில் நன்றியின் சிறு கீறலும் கலந்திருந்தது.

பியசேனா, வீட்டில் மறுபிறவி எடுத்தபோது மாலை ஐந்து மணி.

மனைவி சந்தோஷமாய்க் கண் கலங்கினாள்.

'கேக்' பொட்டலம் சுராங்கனியிடம் கைமாறியது.

இரவு ஏழு மணிக்கு அந்தச் செய்தியை அறிந்தான்.

கட்டிடத்தினுள் நின்ற துப்பாக்கி இளைஞர்கள் தங்களைத் தாங்களே குண்டு வைத்து தகர்த்துக் கொண்டார்கள்...

அதிர்ந்து போனான் பியசேனா.

'ஏன் செய்தார்கள்? எதைச் சொல்ல இது?'

'அவர்களின் இலக்கு எது? நிச்சயமாய் நாங்களல்ல'

'என்ன வேண்டும் அவர்களுக்கு...'

அவனுக்குள் ஒரு பிரளயம் உருவானது.

மரங்களை மட்டுமே பார்த்த மனம் முதல் முதலாய் வேர்களின் ஆழத்தை ஆராய்ந்தது.

'இப்படித் தீர்மானித்துக் கொண்ட பிறகுமா அப்படி இருந்தார்கள்?

... எப்படிச் சாத்திய மாயிற்று...?

'உறவு பாசம் இளமை உணர்வு ஏன் துறந்தார்கள்...?

யார் அவர்கள்?

அந்த இளைஞர்களின் தேவை என்ன? தேடல் என்ன?

'இங்கே ஏன் வந்தார்கள் எங்கிருந்து வந்தார்கள்...?'

இரவுச் சாப்பாட்டுக்கான மனைவியின் அழைப்பு பியசேனாவுக்கு கேட்கவில்லை. இதயம் எழுப்பிய புதுக்கேள்விகள் மட்டுமே கேட்டன.

'உயிரினும் உயர்ந்ததா அவர் தேடுவது?

அது என்னவாயிருக்கும்.

ஐந்து முகங்களும் நினைவில் வந்து மீட்டன.

'எங்களைப் புரிகிறதா?' அந்த முகங்கள் இந்தக் கேள்வியை அவனிடம் கேட்பது போலிருந்தது.

உயிர் சிலிர்த்தது அவனுக்கு.

'அவர்கள் பயங்கரவாதிகளில்லை.... அப்படி இருக்கமுடியாது'

அந்த நிமிடத்தில் தான் உயிரோடு இருப்பது அதற்கு சாட்சி என்பதைப் பியசேனாவின் மனம் உணரமுற்பட்டது. இதயக் கதவில் யாரோ மெதுவாய்த் தட்டினார்கள்.

செய்தி கேட்க வானொலியைத் திறந்தான்.

'சமாதானத்திற்கான யுத்தம்' எண்பத்தைந்து வீதம் பூர்த்தியாகிவிட்டதெனவும் இவ்வாண்டு இறுதிக்குள் அது முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்....

அவன் கை 'சட்' என்று வானொலியை நிறுத்தியது.

■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கருத்து மாற்றமும் அதன் அவசியமும்

தமிழர்களைப் பொறுத்தவரை கருத்துமாற்றம் உடனேயே ஏற்படக்கூடியளவிற்கான காரணிகள் நிறைய உண்டு. 1949 தொடக்கம் இற்றைவரை தினந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனஅழிப்பு நடவடிக்கைகளே அந்தக் காரணிகள் ஆகும்.

நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்ற ஓர் சமூகம். ஓர் இலக்கை அடைவதற்காக தமிழர்கள் தங்கள் வாழ்வை, வாழ்வு ஆதாரங்களைத் ...யாகம் செய்துகொண்டிருக்கின்றார்கள். ...திரம் என்ற இலக்கினை வரித்து, அதற் ...வை எவை இழக்கப்படவேண்டுமோ, ... அனைத்தையும் இழந்துகொண்டு ...போராட்டம் நடைபெற்றுக் கொண்டி...து. சுதந்திரம் என்பது, தென்னாபிரிக்க ...ள் அதிபர் நெல்சன் மண்டேலா ...கள் கூறியது போன்று சுதந்திரத்திற்காக ... அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ...கயான விளைவுகளையுமே குறித்து ...து. இங்கு குறிப்பிடப்போவது அத்த ... விளைவுகளை எதிர்கொள்கின்ற ...தையே சார்ந்து நிற்கின்றது. தமிழ ... பிறந்த ஒவ்வொருவரினதும் அடிமன ... சுதந்திரமான ஓர் நாடு வேண்டும் என்ற ...ணம் ஆழமாகப் பதிந்துள்ளது. இதுவே ...ன்னமும் இந்த மண்ணைப் பற்றிப் பிடித்...க்கொண்டு வாழ்கின்ற மக்களின் நம்பிக்கை ...மூலக்கருவாக இருப்பதால் இங்கே தொடர்ந்...ம் வாழ்கின்றனர். இது ஒரு கொள்கை ...ாற்றமாகும்.

கொள்கை மாற்றம் என்பது பல வடிவங்களில் உள்ளது. ஒரு குழுமத்தில் அல்லது சமுதாயத்தில் ஏற்படும் கொள்கை மாற்றம் அந்த நாட்டின் அரசியல், பொருளாதார, கலை, பண்பாடு போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தவல்லது. இத்தகைய மாற்றங்களானது சுயமாக ஏற்படுவது இல்லை என்றே கூறவேண்டும். உலக நாடுகளின் வரலாறுகளை நோக்கும்போது, ஒவ்வொரு கொள்கை மாற்றங்களும் இயல்பு நிலைக்கு எதிராக அல்லது அதனைப் பாதிக்கும் அசாதாரண நிலைவரும்போதுதான் அவை ஏற்படுகின்றன. ஈழத்தமிழர்களாகிய எங்களுக்கும் அவ்வாறானதோர் நிலைதான் ஏற்பட்டது.

அதாவது, 1956இல் சிங்களத்தை அரசகரும மொழியாக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பே, தந்தை செல்வாவினால் எச்சரிக்கையாகவும், பய உணர்வோடும் ஒரு கருத்துக் கூறப்பட்டது. சிறுபான்மையினருக்கு ஏதோ நடக்கப்போகின்றது, அது அவர்களின் இயல்புவாழ்வைப் பாதிக்கக்கூடும், அவ்வாறான செயற்பாடுகளை கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதே அந்தக் கருத்தாகும். எனினும், 'சிங்களம் மட்டும்' சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் பின்பு நடந்த சிங்கள ஆட்சியாளரின் நடவடிக்கைகள் தமிழர்களின் இயல்பு நிலையைப் பாதித்தது.

.1974 ஜனவரி 10ஆம் திகதி தமிழர்கள் தமது இன, மொழி பண்பாடு போன்றவை பற்றிக் கதைக்கவோ அல்லது ஆய்வு செய்யவோ அவற்றை வளர்க்கவோ முடியாது என்ற சட்டம் கொண்டுவரப்படவில்லை. ஆனால் அமுலாக்கப்பட்டது.

அதாவது, 1974 ஜனவரியில் யாழ். நகரில் நடந்த தமிழாராட்சி மாநாட்டில் விளைவிக்கப்பட்ட வன்முறைப் பிரயோகம் தமிழர் வாழ்வுக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்படுத்தப்பட்ட பெரும் அச்சுறுத்தலே, சிங்களக் குண்டர்களின் குண்டுகள் தமிழர் உடலில் ஈவிரக்கமின்றிப் பாய்ந்தன. ஒன்பது தமிழர்கள் பலியாகினர். இது தமிழர் வாழ்வின் இயல்பையும் வளர்ச்சியையும் பாதித்த நிகழ்வும் செயலுமே.

இவ்வாறான பல சம்பவங்கள் தமிழர்களின் இயல்பு நிலையினை சீர்குலைக்கச் செய்தது. எனவே அவர்கள் புதிய கொள்கை ஒன்றை ஏற்றுக்கொள்வதற்கு தமக்குள் ஓர் இடத்தினை ஏற்படுத்திக்கொண்டனர். அதாவது, சேர்ந்து வாழ்தல் என்ற கொள்கையுடன் தமது வாழ்க்கையை அமைத்த மக்கள் அதற்கு பாதிப்பு ஏற்பட, பாதுகாப்பு இல்லாது போக பிரிந்து வாழ்தல் என்ற கொள்கைக்கு இணங்கினர்.

## கொள்கை மாற்றமும் கருத்து மாற்றமும்

கொள்கை மாற்றம் என்பது பொதுவாகவும் கருத்து மாற்றம் என்பது குறிப்பாகவும் காணப்படுகின்றது. அதாவது கொள்கை மாற்றத்தின் செயல்வடிவம் உருவாக வேண்டுமாயின் அல்லது செயல்வடிவம் பூர்த்தியாக்கப்பட வேண்டுமாயின் அதில் பங்கு பற்றுகின்ற ஒவ்வொருவரினது கருத்திலும் மாற்றம் ஏற்படவேண்டும். அதாவது ஒவ்வொரு மனிதனதும் ஒத்த கருத்து மாற்றமே கொள்கை மாற்றத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும். இவ்வாறு ஒவ்வொரு கொள்கை மாற்றங்களும் நிலைத்து நிற்பதற்கு ஒவ்வொருவரினதும் கருத்து மாற்றம் அவசியமாகின்றது.

கியூபாவின் மக்கள் ஒரே கொள்கைக்குள் வாழ்கின்றார்கள் எனில் அதில் பங்கு பற்றுகின்ற சகல அங்கத்துவரிடமும் கருத்து மாற்றமானது ஏற்பட்டு இருக்கின்றது என்பதே அர்த்தமாகும். ரஷ்யாவில் முன்னைய சோவியத் யூனியன் என்ற கொள்கை உடைந்ததற்குக் காரணம் அங்கு வாழும் மக்கள் கூட்டத்தில் ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட கருத்து மாற்றமாகும்.

எமது நாட்டிலும் கொள்கை மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் ஒவ்வொரு தமிழரிடமும் கருத்து மாற்றம் முழுமையாக ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். எமது போராட்டம் நீண்டு கொண்டு செல்வதற்கு இதுவே மூலமாக இருக்கின்றது.

## கருத்து மாற்றம்

கருத்து மாற்றம் என்பது ஒன்றை ஏற்றுக்கொள்வதோ அல்லது அதற்கு ஆதரவு அளிப்பதோடு மட்டும் நின்றுவிடாது. எம்மவர்கள் இதைத்தான் கருத்து மாற்றம் என நினைக்கின்றனர். கருத்து மாற்றம் என்பது ஏற்றுக்கொள்வதோ அல்லது ஆதரவு அளிப்பதோடு நின்றுவிடாமல் எந்த இலக்கிற்காக கருத்து மாற்றம் ஏற்படுகின்றதோ அதனை அடைவதற்கான செயற்பாட்டில் பங்குபற்றுவதும் அதனால் எழுகின்ற விளைவுகளை எதிர்கொள்வதும் உள்ளடங்கும். இதன்பின்பே கருத்து மாற்றமானது முழுமை பெறுகின்றது.

எமது போராட்டத்தினைப் பொறுத்தவரை கருத்து மாற்றம் என்பது முழுமையானதாக இருக்கவேண்டும். அனைவரும் கருத்தினை ஏற்றுக் கொள்கின்றனர். அனைவரும் கருத்தினை ஆதரிக்கின்றனர் என்பனவற்றால் எமது இலக்கின் முடிவினை அடைந்துவிடமுடியாது.

ஏனெனில் ஒருவர் கருத்தினை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், அவர் வேறொரு கருத்துலகத்துள் வாழ்ந்து கொண்டிருக்கலாம்.

ஒருவர் ஒரு கருத்திற்கு ஆதரவழிக்கலாம், ஆனால் அவர் வேறொரு கருத்தையும் ஆதரிக்கலாம். மேற்கூறிய இரண்டு வகையினராலும் முழுமையரன பயன் கருத்து மாற்றத்திற்குக் கிடைக்காது என்பதே தெளிவு. இவ்வாறான நிகழ்வுதான் தமிழர்களாகிய எமக்குள் இருந்து வருகின்றது. இவை அரசியல் நடவடிக்கைகளுக்காகவும் ஆட்சி நலன்களுக்காகவும் முந்தைய அரசியலாளர்களால் தவறாக ஒழுங்குபடுத்தப்பட்ட (Mal organising) முறைகளாகும்.

கருத்து மாற்றம் ஏற்பட்ட சமூகத்தினருக்கு அவர்களின் வேண்டுதல்களுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்ப செயற்பாடுகள் சீர் செய்யப்பட்டது (Mal adjustment). 1997ஆம் ஆண்டு தேர்தலின் பின் அதன் நோக்கம் நிறைவேற்றப்படாமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய தமிழ்ச் சமூகத்தினரின் கருத்து மாற்றம் என்பதன் யதார்த்தம் என்னவெனில் ஒவ்வொருவரிடமும் இருக்கின்ற கருத்துக்களில் அல்லது ஒவ்வொருவரும் வாழ்கின்ற கருத்துலகத்துள் இருந்து சுதந்திரம் தொடர்பான கருத்து மாற்றத்திற்கு ஒத்துவராத கருத்துக்களை இழக்கவேண்டும் என்பதே.

ஏனெனில் ஒவ்வொரு தனிநபரும் அல்லது குழுமமும் பல எண்ணங்களின் சேர்க்கைக்குள் (Pool of ideas) வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இது எமக்கும் விதிவிலக்கு அல்ல. இத்தகையதொரு நிலைக்குள் இருந்தும் வாழ்ந்து கொண்டும் நாம் போராட்டம் தொடர்பான முழுமையான ஓர் கருத்து மாற்றத்தைப் பெறமுடியாது. அதனால்தான் புதிய கருத்து மாற்றத்தினுள் பிரவேசிக்கும்போது அக்கருத்து மாற்றத்துக்கு எதிரான அல்லது ஒத்திசைவற்ற எண்ணங்களை இழக்க வேண்டும் என குறிப்பிட வேண்டியுள்ளது.

எந்தவொரு மனிதனும் தான் வரித்துக் கொண்ட கருத்துலகத்துள் விரும்பியோ விரும்பாமலோ அதற்குள் வாழ்வதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்கின்றான். அல்லது இசைவாக்கம் அடைகின்றான். இதிலிருந்து மீள்வதற்கு அவனுக்கு அவகாசம் தேவைப்படுகின்றது. அதற்கான கால எல்லையைத் தீர்மானிப்பது கருத்து மாற்றத்திற்கான காரணிகளிலேயே தங்கி உள்ளது.

## யதார்த்தமான கருத்து மாற்றமானது எவ்வாறு இருக்கும்?

தமிழீழத்தில் வாழ்கின்ற ஒரு பெண். இவள் பாரம்பரியமாக ஒரு குடும்பப் பெண்ணாக வளர்வதற்குரிய கருத்துக்களையும் ஏற்பாடுகளையும் பெற்றோர்கள் ஏற்படுத்தி வளர்க்கின்றனர். இப்பெண் தான் எவ்வாறு வளரவேண்டும், வாழவேண்டும் என்ற எண்ணம் அல்லது கருத்துலகம் பெற்றோரால் உருவாக்கப்பட்டுவிடுகிறது. இந்த கருத்துலகமானது திருமணம் முடிந்தபின்பும் தனது கணவனுக்கு கீழ்ப்பணிந்து எவ்வாறு வாழவேண்டும் என்ற வரைக்கும் இருக்கின்றது. திருமணம் முடிந்த பின்பு சமுதாய நடைமுறைக்கு ஏற்ப விரும்பியோ, விரும்பாமலோ தான் வாழ்ந்த கருத்துலகத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கின்றாள். இதே கருத்துலகத்திற்குள் வாழும் இன்னொரு பெண், இந்தக் கருத்துலகத்திலிருந்து வெளியேறி புதிய கருத்துலகத்தினுள் நுழைந்து போராட்டத்தினுள் இணைகிறாள். இங்கு நடந்தது என்னவெனில் உண்மையான ஓர் கருத்து மாற்றத்திற்காக ஒரு பெண் தனது பழைய எண்ணங்களை இழந்ததும், தான் வாழ்ந்த கருத்துலகத்தை துறந்ததும் ஆகும்.

இதுபோன்ற யதார்த்தமான கருத்து மாற்றங்களே எமக்கு இன்று தேவையாக உள்ளது.

## கருத்து மாற்றத்திற்கான அடிப்படைகள் எவை?

கருத்து மாற்றம் ஏற்படுவதற்கான அடிப்படைகள் பல உள்ளன. அதில் முக்கியமானது நடைமுறையில் உள்ள கருத்துலகம் பற்றி சிந்தித்தல் ஆகும். அதாவது நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் கருத்துலகம் சமுதாயம், சூழல், குடும்ப நிலை என்பனவற்றால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய கருத்துலகத்திற்குள் வாழ்ந்தால் வரும் விளைவு என்ன? அந்த விளைவு நாம் வாழ்வதற்குரிய பாதுகாப்பைத் தரமுடியுமா? ஆதாரங்களைப் பெற்றுத்தர முடியுமா அல்லது நாம் வாழ்வதற்குரிய பாதுகாப்பைத் தரமுடியுமா? மேற்கூறிய வினாக்களுக்குரிய விடைகள் எமக்கு நிறைவாக அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமானால் அதற்குமேலாக இன்னொரு வினா எழுப்பப்படவேண்டும். அதாவது, எங்களுக்கு ஏற்ப நாங்கள் கருத்துலகத்தை ஏற்படுத்த அல்லது மாற்றிக் கொள்ள முடியுமா? அதாவது, நாங்கள் எமது இடத்தில் சுதந்திரமாகச் செயற்பட முடியுமா? என்பதே அந்த வினாவாகும். இதற்கும் ஆம் என்ற விடை கிடைப்பின் நாங்கள் அந்தக் கருத்துலகத்தைப் பின்பற்றலாம்.

நடைமுறையில் உள்ள கருத்துலகம் பற்றி சிந்தித்தல் என்பது மேற்குறிப்பிட்ட நான்கு வினாக்களை எழுப்புதலும் அதற்கான விடைகளைப் பெறுவதனையுமே குறித்துநிற்கின்றது.

கருத்து மாற்றத்தின் அடிப்படைகளில் அடுத்ததானது நாங்கள் வரைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கருத்துலகம் எவ்வளவு காலம் வாழும். பிறநபர் அல்லது குழுமங்களின் கருத்துலகத்திற்கு இசைவாக இருக்கிறதா அல்லது அதற்கு ஏற்ப மாற்றிக்கொள்ள முடியுமா என சிந்தித்தல் வேண்டும்.

அதாவது, நாங்கள் வாழும் வாழ்வாதாரங்கள் பொதுவானவை. அவை தனிமனிதனில் தங்கி இருக்கவில்லை. எனவேதான் வளர்ந்துகொண்ட கருத்துலகம் பிறருடன், அல்லது சூழலுடன் ஒன்றிப் போகின்றதா என சிந்திக்கவேண்டும். அவ்வாறு கால சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றம் பெறாத அல்லது ஒத்துவராத கருத்துக்களும் கருத்துலகமும் வாழ்வதற்கான ஆயுட்காலம் சிறிதாகவே இருக்கும். உதாரணமாக இராணுவ ஆக்கிரமிப்பில் தமது வாழ்வாதாரங்களை இழந்து, உயிருக்கே உத்தரவாதம் இல்லாத சூழலில் இருக்கும் ஒரு மாணவன் தான் ஏற்கெனவே முடிவெடுத்த மேற்படிப்பு, தொழில் வாய்ப்பு என்ற கற்பனையுடன் தொடர்ந்து வாழமுடியாது. ஏனெனில் புறச்சூழல் அதற்கு இடம் கொடுக்காது. அத்துடன் எண்ணத்தை நிறைவேற்றுவதற்கான பாதுகாப்பும் இல்லை. எனவே மாற்றுவழி ஒன்றை அவன் உருவாக்க வேண்டும். அந்த மாற்றுவழி சூழலுக்கு ஏற்ப இருக்கவேண்டும்.

கருத்து மாற்றத்தின் அடிப்படைகளுள் முக்கியமான இன்னொன்று என்னவெனில், நாங்கள் நிர்ணயித்த கருத்துலகத்தினால் வரப்போகும் விளைவுகள் ஒட்டுமொத்தமாக எமது சமுதாயத்தை, எமது இனத்தை, எமது தனித்துவத்தை எவ்வாறு மேம்படுத்தும், ஏற்கெனவே உள்ள கருத்துலகத்துள் வாழ்ந்தோர்களின் விளைவுகளாக எமது நாட்டிற்கு ஏற்பட்ட நன்மை என்ன, தீமை என்ன? என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்திக்க முடியுமானால் முடிவானது எமக்கென்று ஓர் நாட்டினைக் கட்டி எழுப்ப எமது தேசியத்தை நிலைநிறுத்த நாம் பின்பற்றிய கருத்துலகம் உதவவில்லை என்ற பதிலே தெளிவாகப் புலப்படும்.

மேற்குறிப்பிட்ட கருத்துமாற்றத்திற்கான மூன்று அடிப்படைகளும் எமக்குள் தேசியம் சம்பந்தமான கருத்துமாற்றம் ஏற்படுவதற்கான ஆதாரங்களாக அமையும் என்பதே புலப்படுகின்ற கருவாகும்.

நாங்கள் காலம் காலமாக கடைப்பிடித்து வந்த கருத்துலகம் எமது தேசியத்தைக் கட்டி எழுப்ப உதவவில்லை. எமது இனத்தின் தனித்துவத்தைப் பேணமுடியவில்லை. அது தள்ளாடிக்கொண்டு இருக்கின்றது. எமது கருத்துலகம் எமது நாட்டினது பாதுகாப்பை உறுதிப்படுத்த பயன்படவில்லை. அது உறுதியற்றதாகக் காணப்படுகின்றது. நாங்கள் சேர்ந்து வாழமாட்டோம், பிரிந்து வாழ விரும்புகிறோம் என்ற கொள்கை மாற்றத்திற்கு வலுச்சேர்க்கவில்லை. 1977இல் தனிநாடு என்ற கோரிக்கைக்கு வாக்களித்துவிட்டு அதனை அடைவதற்கான நடவடிக்கைகளுக்கு எமது கருத்துலகம் உதவவில்லை. எமது வரலாறு, எமது பண்பாடு ஆகியவை தொடர்ந்து வாழ்வதற்கு எமது கருத்துலகம் பயன்படவில்லை. மாறாக சாதிப்பாகுபாடு, சமுதாய ஏற்றத்தாழ்வு, பெண் ஒடுக்குமுறை போன்ற ஓர் சமுதாயத்தை, இனத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் மூலவேர்கள் தோன்றுவதற்கும் வளர்வதற்குமே நாங்கள் வரைந்து கொண்ட கருத்துலகம் பெரிதும் உதவியது. ஆகையால் தமிழர்களாகிய எங்களுக்கு இன்று முழுமையானதோர் கருத்து மாற்றம் அவசியம் தேவைப்படுகின்றது. இதுவே கருத்து மாற்றத்துக்கான அவசியமாகும். ■

கே.பி.றெஜி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழீழ விடுதலைக்காய் தனது உயிரை அர்ப்பணித்த விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் சங்கர் அவர்களது நினைவு நிகழ்வுகள் அவுஸ்திரேலியாவில் சிறப்பாக நடைபெற்றது. அந் நிகழ்விலிருந்து...







## 2001 மாவீரர்நாள் வெளியீடுகளாக வெளிவருகின்றன.






**தமிழ்த்தாய் நாட்காட்டி-2002**

தமிழர் வரலாறு, உலக வரலாறு, தமிழர் வாழ்வோடு ஒன்றிய விபரங்களை உள்ளடக்கியதாக ஐரோப்பிய நேரத்திற்கு கணிக்கப்பட்ட வாக்கிய நாட்காட்டி.



**ஓயாத அலைகள் - 3 வீடியோ சீ. டி.**

ஓயாத அலைகள் வெற்றிச் சமர்களின் தொகுப்பு.

**பொங்குதமிழ் இசைத்தட்டு. ஓடியோ சீ. டி.**

பாடல் எழுத்துருவாக்கம் - கவிஞர் காசி ஆனந்தன்
பாடல்- தேனிசை செல்லப்பா



**வெளிவரும் புதிய ஒளிவீச்சுக்கள்...**

டிசம்பர் -2000 / ஜனவரி - 2001 / பெப்ரவரி - 2001 / மார்ச் - 2001 / ஏப்ரல் - 2001

**வெளியீடுகளை மாவீரர்நாள் நிகழ்வு மண்டபங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**